பக்கங்கள் – 16
விலை – ரூபா 50
Registered as a Newspaper

முச்சந்தி முரளி



"ஆருக்கு சப்போர்ட் எண்டு அறிவிச்ச பிறகும் அங்கிடுதத்தியள் சனத்தை பேக்காட்டுறதை பாத்தியளோ"

# உதயன்

சுடர் : 39
கதிர் : 290
புதன்கிழமை
11 செப்ரெம்பர் 2024
ஆவணி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055
புதன்பொய்கை

விருப்பு வாக்குகள் எண்ணவேண்டி வந்தால்

# அனைத்து இடங்களிலும் சமநேரத்தில் வாக்கெண்ணல்!

தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்து

**கொழும்பு, செப்ரெம்பர் 11**

**சகல வாக்கு எண்ணும் நிலையங்களிலும் ஒரேநேரத்தில் வாக்கு எண்ணிக்கை இடம்பெறுவதுடன், ஏதாவது வாக்கு எண்ணும் நிலையத்தில் தாமதம் ஏற்படுகின்றது என்றால் உடனடியாக மேலதிக பணியாளர்களை நியமித்து வாக்கு எண்ணிக்கையைத் துரிதமாகவும் - சரியாகவும் முடிக்கவேண்டும் - இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஆணையாளர், தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

15

## டிப்பர் மோதி மாணவி பலி

யாழில் துயரம்

யாழ்ப்பாணம், செப். 11
கல்வி நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த மாணவி, யாழ்ப்பாணம் - ஆடியபாதம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது டிப்பருடன் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

15

நடுக்கடலில்

## மீன்பிடியில் ஈடுபட்ட தொழிலாளி இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 11
மீன்பிடியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவர் நடுக்கடலில் உயிரிழந்துள்ளார். கிறிஸ்தோபர் ஜேசுதாஸன் (வயது-62) என்பவரே உயிரிழந்தவராவார்.

15

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமிழரசின் அறிக்கை ஞாயிறன்று

வவுனியா, செப். 11
ஜனாதிபதித் தேர்தல் அறிக்கைகளை ஆராய்ந்து எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அறிக்கை வெளியிடவுள்ளோம் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

15

## ரயில் மோதி பெண் பலி!

வவுனியா, செப். 11
வவுனியா - ஓமந்தை பகுதியில் ரயிலுடன் மோதுண்டு பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி நேற்று மாலை

15



## எமது வெற்றியை தடுக்கமுடியாது

அநுர ஆணித்தரம்

கொழும்பு, செப். 11
ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியால் வெற்றிபெற இயலுமென எம்மனைவருக்கும் நம்பிக்கை இருக்கின்றது. தற்போது எமது எதிர்த்தரப்பினர் அவர்கள் ஒருபோதுமே எதிர்பார்த்திராத தலைவிதியை எதிர்நோக்கி இருக்கிறார்கள். அவர்கள் தமக்கிடையில் மாத்திரம் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொள்வதை நீண்டகாலமாக செய்துவர முடியுமென நினைத்தார்கள். எனினும் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நிச்சயமாக அந்த மரபுரீதியான அதிகாரப் பரிமாற்றம் முற்றுப்பெறும் - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்

15

பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக

## சிலிண்டருக்கு வாக்கிடுக!

கிளிநொச்சியில் ரணில் கோரிக்கை

கொழும்பு, செப். 11
சஜித்தின் அல்லது அநுரவின் எதிர்காலத்தை அல்ல, தமது மற்றும் தமது பிள்ளை

15

## இராஜாங்க அமைச்சர்களின் பதவிகள் நேற்றுப் பறிப்பு!

ஜனாதிபதி ரணில் அதிரடி

கொழும்பு, செப். 11
ஜனாதிபதி ரணிலால், இராஜாங்க அமைச்சர்கள் ஐந்து பேரின் பதவிகள் நேற்றுப் பறிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கிய இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மற்றும் ராஜபக்

15

மனைவியின் அந்தியேட்டியன்று

## கணவனும் உயிரிழப்பு

கரணவாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 11
மனைவியின் அந்தியேட்டிக் கிரியை இடம்பெற்றதைத் தொடர்ந்து, அன்று மாலையே அவருடைய கணவனும் திடீர் சுகவீனமுற்று உயிரிழந்த சோகம் கரணவாய் வடமேற்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

15

## சஜித் வெற்றிபெற்றதும் நாடாளுமன்று கலையும்

ஐக்கிய மக்கள் சக்தியின் அஜித் பி பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, செப். 11
ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்றால், செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதியுடன் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான

15



## வடமாகாணத்துக்கு வருகின்றார் சஜித்!

கொழும்பு, செப். 11
ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் 15 ஆம் திகதி மீண்டும் வடமாகாணத்துக்கு வரவுள்ளார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழரின் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்க வேண்டும்

## சிறிதுங்க ஜயசூரிய தெரிவிப்பு



**கொழும்பு, செப்.11**

**தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். அத்துடன், தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவம் உடன் மீளப்பெறப்படும் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறை வேலைத்திட்டத்தில் முன்வைக்கப்படவேண்டும்.

அனைத்து அரசியல் கைதிகளும் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடன்விடுதலைசெய்யப்படவேண்டும். காணாமல்போனவர்கள்தொடர்பில்உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு அதன்மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். சிவில் நிர்வாகத்தில் இராணுவச் செயற்பாட்டை நிறுத்தல், பொது மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவம் மீளப்பெறப்படவேண்டும்.

வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டும். தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிகாரப்பகிர்வுக்கு புத்துயிர் வழங்கவேண்டும். தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்ப தற்கான தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-44)

---

கடவுச்சீட்டு நெருக்கடி

# புலம்பெயர்ந்தவர்கள் வாக்களிப்பில் சிக்கல்

கொழும்பு, செப்.11

தற்போது நாட்டில் நிலவும் கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள நெருக்கடி காரணமாக புலம்பெயர் தொழிலாளர்கள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையான புலம்பெயர் தொழிலாளர்கள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஆர்வமாக உள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் கடவுச்சீட்டு பெறுவதிலுள்ள நெருக்கடி காரணமாக இவர்களால் தமது கடவுச்சீட்டுகளை புதுப்பிக்க முடியாமல் உள்ளது.

அரசாங்கம் திட்டமிட்டு இதனைச் செய்கிறதா என சந்தேகிக்க வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

---

# வாக்கை அள்ளவே அநுரவுக்கு ஞானம்!

## ஐ.ம. சக்தி சுட்டிக்காட்டு

வவுனியா, செப்.11

இலங்கை இந்திய ஒப்பந்தம் மற்றும் மாகாணசபை முறைமைக்கு எதிராக அன்று போர்க்கொடி தூக்கிய ஜே.வி.பியினரே. அந்தக் கட்சியினருக்கு வடக்குக்கு சென்று வாக்கு கேட்பதற்கு உரிமை கிடையாது.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக மக்களை கொன்ற கட்சிதான் ஜே.வி.பி. அந்தக் கட்சியினர் வடக்குக்கு சென்று வாக்கு கேட்கும் உரிமை கிடையாது.

வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்திகளை செய்யக் கூடிய தலைவர் சஜித் பிரேமதாஸவே.

வடக்கில் உள்ள தமிழ்த் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனை அவர்கள் வெளிப்படையாகவே அறிவித்துள்ளனர் - என்றார். (ச-44)

---

# நேரடி விவாதம் ரணில் தயாரா?



## அநுர அழைப்பு

கொழும்பு, செப்.11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் கேட்கப்படுகின்ற சகல விடயங்களுக்கும் தான் விடை கூறுவதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்மை 'எனது நண்பர் அநுர'என விளிக்கிறார். எதிர்வரும் தமது அரசாங்கத்தில் ரணிலுக்கு எதிரான தண்டனைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள இவ்வாறு தம்மை நண்பர் என கூறுகிறார். எனினும் தாம் இவ்வாறு நண்பர் என அழைப்பதற்கு சிக்கப் போவதில்லை.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் மத்திய வங்கி பிணை முறி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும். அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரலையாக பகிரங்க விவாதமொன்றில் ஈடுபட நான் தயார் - என்றார். (ரி-சி)

---

# நாட்டுக்கான திட்டம் எம்மிடமே உண்டு

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, செப்.11

நாட்டுக்கான வேலைத்திட்டம் எம்மிடமே. தாம் எப்போதும் கொள்கை ரீதியான அரசியலையே செயற்படுத்துவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மூதூர்ப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மக்களுக்கு வாழும் உரிமையை வழங்கியவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச என்பதை மக்கள் அறிவார்கள்.

அந்தவகையில் நாட்டின் அபிவிருத்திக்கான சரியான வேலைத்திட்டத்தை தமது கட்சி அறிமுகப்படுத்தியுள்ளது.

எமது ஆட்சியில் அனைத்துக் கலாசாரங்களையும் பாதுகாத்து, இளைஞர்கள் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கத் தேவையான கொள்கை முடிவுகள் எடுக்கப்படும் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ச)

---



# மேடைகளில் திருடர்கள்

## சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, செப்.11

மேடையில் உள்ள வேட்பாளர்களில் பலர் திருடர்கள் என்று நிரூபிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அனைத்து வேட்பாளர்களும் அழகான கொள்கை அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். ஆனால் அதை எப்படிச் செயற்படுத்துவார்கள் என்று காத்திருக்கிறேன். இந்த முன்மொழிவுகளை திருடர்கள் குழுவுடன் செயற்படுத்தமுடியாது. மேடையில் உள்ள வேட்பாளர்களில் பலர் திருடர்கள் என்று நிரூபிக்கப்பட்டவர்களுடன் தொடர்புடையவர்கள். இப்படிப்பட்டவர்[illegible] துவது என்[illegible] என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

---

பொதுவேட்பாளருக்கே ஆதரவு

# தமிழரசின் கிளிநொச்சிக் கிளையின் தீர்மானத்தில் எந்த மாற்றமுமில்லை

கிளிநொச்சி, செப். 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய கிளிநொச்சி மாவட்டக்கிளை, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை ஏகமனதாக எடுத்திருந்தது. அதில் எந்த மாற்றமும் இல்லை என நேற்று மீண்டும் கூடி முடிவு செய்துள்ளது.

மாவட்டக் கிளையினுடைய தீர்மானத்தை அங்கீகரிக்கும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் மூலக் கிளைகள் பிரதேசக் கிளைகள் மாவட்டக்கிளை உட்பட்ட தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பொதுச்சபையினர் கூடி நுணுகி ஆராய்ந்து மாவட்டக் கிளையால் மேற்கொள்ளப்பட்ட தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிக்கும் தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்ததுடன் தொடர்ந்து அதை நோக்கிய பணிகளை மாவட்டக்கிளை தீர்க்கமாக மேற்கொள்ள வேண்டும் என்று ஏகமனதாகத் தீர்மானித்தனர். (ஓ-26,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்தை இலங்கை பாதுகாக்குக

## ஐ.நா. பேரவையில் ஆஸி. வலியுறுத்து

கொழும்பு, செப்.11

**கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்கான உரிமைகளை தீவிரமாகப் பாதுகாப்பதற்குத் தேவையான மாற்றங்களை இலங்கை மேற்கொள்ளவேண்டும் என்று அவுஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது.**

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே ஜெனீவாவில் உள்ள அவுஸ்திரேலியத் தூதுக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

இலங்கையில், பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கங்கள் மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட அனைத்துப் புதிய சட்டங்களும் இலங்கையின் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றும் வகையில் அமைய வேண்டும். உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கானஆணையத்துக்கான யோசனை தொடர்பில் பொருத்தமான ஆதாரங்கள் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பேணவேண்டும். மேலும் நம்பிக்கையைப் பெறுதல் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்தல் அவசியம் என்றும் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 14 இந்திய மீனவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப்.11

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த 14 இந்தியாவின் தமிழக மீனவர்களும் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த சனிக்கிழமை நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டதுடன் மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தியபோதே எதிர்வரும்20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ச-66)


## இளைஞனைக் கடத்திய
# சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

முச்சக்கரவண்டியில் இளைஞனைக் கடத்திய குற்றச்சாட்டில் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஆனந்தராஜா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கோப்பாயைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை முச்சக்கரவண்டியில் கடத்திச் சென்று தாக்கியதோடு, அவரிடமிருந்து 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் வெள்ளிச் சங்கிலி ஆகியவற்றையும் கொள்ளையடித்து தப்பிச் சென்றிருந்தனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞன் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு நீதி மன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 23 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-25,23)



# மிருகவதை; ஒருவர் கைது

கிளிநொச்சி, செப். 11

21 ஆடுகளை அனுமதிப் பத்திரமின்றியும் சுகாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமல் மூடி அடைத்து கூலர் வாகனத்தில் வெளிமாவட்டத்துக்குக் கொண்டு சென்ற குற் றச்சாட்டில் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பகுதியில்வைத்து நேற்றுமுன்தினம் இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது. மீட்கப்பட்ட ஆடுகளுடன் வாகனம் கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ஒ-113)

## பால்மா விலை
# குறைப்பு

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மில்கோ பால்மாவின் விலையைக் குறைக்க நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 400 கிராம் பால்மா பொதி ஒன்றின் விலை 75 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1,050 ரூபாவாகும்.

இதேவேளை, ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 190 ரூபாவால்குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 2,585 ரூபாவாகும். (ச)

# ஆள்களற்ற அலுவலகங்கள்

கொழும்பு, செப் .11

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் கொழும்பு மாவட்டத்துக்கான தேர்தல் அலுவலகங்களில் எவரையும் காணவில்லை என ஆங்கில ஊடகமொன்று படங்களுடன் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் படங்களுக்கு பேய் வீடுகள் என தலைப்பிட்டுள்ளது. (ச-25,6)

# தினம் தெரியுமோ?

"ஒளிக்கத் தெரியாத கள்ளன் விதானை வீட்டில போய்ஒளிச்சானாம்" எண்டுயாழ்ப்பாணத்துக்காரர் அடிக்கடி சொல்லுவினம். ஆனால் விதானையார் ஒருத்தரே இப்ப தன்ர ஒப்பீஸை விட்டிட்டு பிரதேச செயலகத்துக்க போய் ஒளிச்சிருக்கிறதைப் பற்றி சனங்கள் பட்சிக்குச் சொல்லுகினம். சாவகச்சேரி பிரதேச செயலக ஏரியாவுக்குள்ள ஒரு பெண் விதானையார்தான் மூண்டு கிழமைக்கு மேலா தன்ர ஒப்பீஸுக்கு வராமல் ஏ.ஜி.ஏ. ஒப்பீஸுக்கு சனத்தை வரச் சொல்லுறாவாம். அதுக்கும் ஒரு காரணம் இருக்கு.

அந்த விதானையார் முதலில எந்த ஏரியாவுக்குப் பொறுப்பா இருக்கிறாவோ அங்கதான் ஒரு பொதுக்கட்டடத்தில ஒப்பீஸ் போட்டு இருந்தவா. ஆனால் நாலைஞ்சு கிழமைக்கு முதல் அவான்ர ஒப்பீஸ்போர்ட்டை(அலுவலகப்பெயர்ப்பலகையை) ஆரோ சில கழிசடைகள் கழட்டி, அங்க இருந்த கிணத்துக்க போட்டிட்டுதுகள். அதுக்குப் பிறகுதான் அந்த விதானையார் ஒப்பிஸ் பக்கமே வராமல் விட்டிட்டாவாம். சனங்கள் ஏதும் அலுவல் எண்டால், தங்கட இடத்தில இருந்து அஞ்சாறு மைலுக்கு அங்கால இருக்கிற ஏ.ஜி.ஏ. ஒப்பீஸுக்குப் போனால் தான், விதானையாரைச் சந்திச்சு அந்த அலுவலை முடிக்க வேணுமாம். வேலை எண்டால் ஆயிரத்தெட்டு பிரச்சினையள் வரும் தான். அதுவும் விதானை வேலை எண்டால் வில்லங்கத்துக்கு குறைவே இருக்காது. போற்றுறவையும் இருப்பினம் தூற்றுறவையும் இருப்பினம். அப்பிடி விதானையாரோட ஏதும் கொளுவல் இருக்கிறவைதான் இப்பிடியொரு எளியவேலையைச் செய்திருக்க வேணும். ஒண்டிரண்டு கழிசடையள் செய்த காரியத்துக்காக முழு ஊர்ச்சனத்தையும் இப்பிடி ஏ.ஜி.ஏ. ஒப்பீஸுக்கு அலைய விடுறதும் சரியில்லை தானே.

விதானையாரும் , ஏ.ஜி.ஏ. யும் இந்த விசயத்தில சனத்தைப் பற்றிக் கொஞ்சமும் யோசிக்காமல் தங்கட சுகத்தை மட்டும் பாக்கினம் எண்டதுதான் சனத்தின்ர குற்றச்சாட்டு. இப்ப இருக்கிற விதானையாருக்கு அந்த ஊரில வேலை செய்யிறது பிடிக்கேலை எண்டால் அவாவை மாத்திப் போட்டு வேற ஒராளைப் போடவேணும். அப்பிடியில்லாமல் பாதுகாப்புப் பிரச்சினை எண்டால் இதைப் பற்றி பொலிஸுக்கு அறிவிச்சு, விதானையாரின்ர ஒப்பீஸில இனிமேல் ஆரும் எந்தக் கழிசடை வேலையும் செய்யாத அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். இப்பிடி ஈஸியா கனக்க வழியள் இருக்க, ஒரு போர்ட்டை தூக்கிப் போட்டதுக்கு, விதானையார் ஏ.ஜி.ஏ. ஒப்பீஸுக்க இருந்துதான் வேலை செய்வன், அந்த ஊருக்குப் போக மாட்டன் எண்டுறது அவையின்ர உத்தியோகத்துக்கே எதிரான செயல். விதானை வேலை எண்டுறது எப்பவும், எங்கையும் போய்ச் செய்யவேண்டிய வேலை. முக்கியமா சனத்துக்கு என்ன பிரச்சினை எண்டாலும் அங்க விதானையார் தான் முதலில நிக்கோணும். அதைவிட்டிட்டு கழிசடையளுக்குப் பயந்து கந்தோரை விட்டிட்டுப் போய் சனத்தைக் கந்தறுக்க வைக்கிறது ஞாயமே இல்லை கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிள் விபத்து ஒருவருக்கு படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.11

மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவரது கால் விரல்கள் துண்டாடப்பட்டுள்ளன. இந்த விபத்து நேற்று யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-26,20)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தடைகளைத் தாண்டி வெற்றி அடையும் நாள். வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும், விழிப்புடன் செயற்படவேண்டிய நாள். சூழ்நிலையறிந்து அதற்கேற்ப செயற்படுவதால் நன்மைகள் கூடும்.

**இடபம்:** நீண்டநாள் முயற்சி இன்று நிறைவேறும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். எதிர்பார்ப்பு எளிதாக பூர்த்தியாகும். செயல்களில் ஆதாயம் ஏற்படும். பிரச்சினைகள் காணாமல் போகும். நண்பர்களின் உதவி உண்டு.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த விவகாரம் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்தும். முயற்சியால் முன்னேறுவீர்கள். நன்மையான நாள். எதிர்ப்புகள் விலகும். வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கும். செல்வாக்கு உயரும் நாள்.

**கடகம்:** உழைப்பால் உயர்வு காணும் நாள். முயற்சி ஒன்றில் போராடி வெற்றி பெறுவீர். கவனமாக செயற்படவேண்டிய நாள். பழைய பிரச்சினை ஒன்று மீண்டும் தலையெடுக்கும். மகிழ்ச்சியான நாள். செயல்களில் வெற்றி காண்பீர்.

**சிம்மம்:** விழிப்புடன் செயற்படவேண்டிய நாள். தேவையற்ற பிரச்சினைகள் தேடி வரும். சுற்றி இருப்பவர்களைப் பற்றி தெரிந்துகொள்வீர். அதிரடியாக ஒரு முடிவு மேற்கொண்டு வெற்றி அடைவீர். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி ஒத்திப்போகும்.

**கன்னி:** எச்சரிக்கையாக செயற்பட வேண்டிய நாள். வியாபாரத்தில் சில பிரச்சினைகள் தோன்றும். முன்னேற்றமான நாள். எதிர்பார்த்த பணம் வரும். கடன்களை அடைத்து நிம்மதி அடைவீர்.

**துலாம்:** யோசித்து செயற்பட வேண்டிய நாள். உங்கள் முயற்சியில் எதிர்பாராத தடைகள் தோன்றும். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை சரிசெய்வீர். அதிர்ஷ்டமான நாள். எதிர்பாராத வருவாயை அடைவீர்.

**விருச்சிகம் :** குழப்பம் விலகி தெளிவுடன் செயற்படும் நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி வரும். அனைவரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். தேவையற்ற பிரச்சினைகள் உங்களைத்தேடி வரும்.

**தனுசு:** கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். மனதில் குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். நெருக்கடி நீங்கும் நாள். எதிர்ப்புகளை சமாளித்து உங்கள் முயற்சியில் வெற்றி அடைவீர். அலைச்சல் அதிகரிக்கும்

**மகரம்:** வேலைப் பளுவால் நெருக்கடிக்கு ஆளாகும் நாள். வியாபாரத்தில் புதிய பாதை தெரியும். இலாபமான நாள். எதிர்பார்த்த வரவு வரும். நண்பர்களால் ஆதாயம் அதிகரிக்கும். வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப்போகும்.

**கும்பம்:** வியாபாரத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள். உடலில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். வியாபாரத்தை விரிவு செய்வீர். திட்டமிட்ட வேலைகளை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர். அதிர்ஷ்டமான நாள். பணவரவு திருப்திதரும்.

**மீனம்:** வியாபாரத்தில் ஏற்பட்ட தடை விலகும். இழுபறியாக இருந்த பிரச்சினை முடிவுக்கு வரும். பணியிடத்தில் பிரச்சினைகளை சந்திக்கும் நாள். மனதில் இனம் புரியாத குழப்பம் தோன்றும். முன்னேற்றம் தோன்றும்.

# ஊரியான் கிராமத்தில் தொடரும் மணலகழ்வு

### பிரதேச மக்கள் விசனம்

**கிளிநொச்சி, செப்.11**

**கிளிநொச்சி, கண்டாவளை - ஊரியான் கிராமத்தில் கடந்த பல வருடங்களாக சட்டவிரோத மணலகழ்வு தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதனால் எமது பிரதேசம் எதிர்காலத்தில் பேரழிவுகளை சந்திக்கக் கூடிய அபாயம் ஏற்படும் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் பரந்தன் வழியாக பிற இடங்களுக்கு தொடர்ச்சியாக மணல் கொண்டு செல்லப்படுகிறது. தொடரும் இந்த மணல் அகழ்வால் பெரும் குழிகள் ஏற்பட்டு உவர் நீர் கசிவுகள் ஏற்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஊரியான் கிராமம் பேரழிவுகளை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகாரிகளால் கடந்த காலங்களில் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பல தடவைகள் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாது ஊரியான் கிராமத்தில் தற்போதும் மணலகழ்வு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது- என்றனர். (ச-22,13)

## விஞ்ஞானபீடத்துக்குத் தெரிவான மாணவர்கள் தொடர்புகொள்க!

### யாழ்.பல்கலை அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11


யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால், அவர்களைப் பீடாதிபதி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் அறிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய 2023/2024 கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட விஞ்ஞான பீட மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் கடந்த 9 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெற்றிடங்களை நிரப்பும் பட்டியல் மூலமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் புதிய மாணவர்களும் 2023/2024 கல்வியாண்டில் தமது கற்கைகளைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் உடனடியாக விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு, புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வில் பங்கேற்குமாறு பீடாதிபதி அறிவித்துள்ளார். (ச)



## தொழிற்சந்தை

யாழ்ப்பாணம், செப்.11

மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களமும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய மாபெரும் தொழிற்சந்தை பிரதேச செயலாளர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தொழில்வாய்ப்பினை எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற மற்றும் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்ற 60 பயனாளிகள் கலந்து பயனடைந்ததுடன், 15 தொழில் வழங்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டன. (ச-45-9)

## கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.11

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்க்கொடுப்பனவு ஆகியன அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

கொடுப்பனவை எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-45-9)



கிளிநொச்சி அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்தின் நிழற் குடை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் சி.சிவகுமாரினால் நிழற் குடைக்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. (ச-22,13)

## வாழைப்பழம் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை என்றுமில்லாத அளவுக்கு சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே, ஜூன் மாதங்களில் வீசிய கடும் காற்றினால் வாழைகள் நோய்தொற்றுகளுக்கு இலக்காகியும், சரிந்து விழுந்தும் சேதமடைந்தமையாலேயே வாழைப்பழச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (ச-25, 17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 100 பில்லியன்
## கடந்துவிட்ட பரிவர்த்தனைகள்



கடந்த ஆண்டு நாம், ரூ.40 பில்லியன் மதிப்புள்ள பரிவர்த்தனைகளையும் கடந்து, அதற்கு அப்பாலும் வளர்ச்சியடைந்துள்ளோம். எம் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை ஒவ்வொரு நாளும் மாபெரும் உயரங்களை அடைய எமக்கு உதவுகிறது.

உங்களின் எதிர்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாம் இன்று தொழில்நுட்பத்தில் முதலீடு செய்கின்றோம்.

PickMe
முடிவற்ற சாத்தியங்கள்

ஆரம்ப பொது பங்கு வழங்கல் | வழங்கல்கள் 2024 செப்டெம்பர் 13 அன்று ஆரம்பமாகவுள்ளன

வழங்கலுக்கான இணை முகாமையாளர்கள்

CT CLSA
Commitment. Trust. Continuity
+94 11 258 4843

CAL
+94 11 231 7777

மேலதிக விபரங்களுக்கு தகவலறிக்கையினை பார்வையிடவும்

ஆரம்ப பொது பங்கு வழங்கல் தொடர்பான தகவலறிக்கை மற்றும் விண்ணப்பங்கள் www.pickme.lk மற்றும் www.cse.lk (கொழும்பு பங்கு பரிவர்த்தனை) ஆகிய வலைத்தளங்களில் பெற்றுக்கொள்ளப்படலாம்.

DIGITAL MOBILITY SOLUTIONS LANKA LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 08 . 1937



மறைவு 10 . 09 . 2024

## அமரர் சரவணமுத்து சந்திரா

இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியைப் வசிப்பிடமாகக் கொண்ட சரவணமுத்து சந்திரா நேற்று (10.09.2024) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்துவின் மனைவியும் காலஞ்சென்ற வாசுதேவன் மற்றும் மகேஸ்வரன் (கொலண்ட்), சூரியதேவன், புனிதவதி (கொழும்பு), கல்யாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சகுந்தலேஸ்வரி தயாநிதி (கொலண்ட்), பாமினி (அமரர்), ஶ்ரீதரன் (அமரர்), சிவரூபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பார்த்தீபன் (ஆசிரியர்-யாழ்ப் பாணக்கல்லூரி), காண்டீபன், றஜிதா (லண்டன்), றஜீபன், நிரோஜா, நிரூபன், லவப்பிரியன், லக்‌ஷப்பிரியன், லாவண்யா, மிதுஷன், சங்கீதா, லோஜிகன், நிரோஷ், நிலக்‌ஷ், ப்ரித்தா, உதேஷ், குகப்பிரியன், சாமந்தி, சரண், டிலக்‌ஷி, நிந்துஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சஞ்சனா, நிகிதா, ஶ்ரீவர்ச்சி, கேயார்ச்சி, ஜெய்சியா, அக்‌ஷயா, அனிஸ், நிமாஷி காவ்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று காரைக்கால் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இணுவில் கிழக்கு,**
**மஞ்சத்தடி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 56164) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 09 . 1944



மறைவு 09 . 09 . 2024

## அமரர் வசுந்தராதேவி பரமேஸ்வரநாதன்

**(இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்)**

கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வசுந்தராதேவி பரமேஸ்வரநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (09.09.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசேகரம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம்-பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கம் பரமேஸ்வரநாதனின் (இளைப்பாறிய எழுது வினைஞர், நல்லூர் பிரதேசசபை), அன்பு மனைவியும் மதிவதனா (ஆசிரியர், புனித நல்லாயன் மகளிர் வித்தியாலயம்), யசீலா (முன்னாள் ஆசிரியை, யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிரிதரன், பிரதீபன், காலஞ்சென்ற சுகந்தீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரன், மகேந்திராதேவி, நந்தகுமார், சாரதா, காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மநாதன், கதிர்காமநாதன், மாணிக்கத்தியாகநாதன், கணேஸ்வரநாதன், காலஞ்சென்றவர்களான தமயந்தி, கணேஸ்வரதேவி, தங்கேஸ்வரி தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரணவன், சாமந்தி, வாதாபன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**31/1 சைவப்பாடசாலை வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 2,000 லீற்றர் கோடா அழிப்பு



கிளிநொச்சி, செப்.11

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்புக் காய்ச்சும் நிலையம் தருமபுரம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டுபிடித்து அழிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது கசிப்புக் காய்ச்சிய சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

அதனை அடுத்து அங்கு வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 40 லீற்றர் கோடாவை பொலிஸார் அழித்துள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணைகள் முன்னெடுத்துள்ளதாக தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம் சதுரங்க தெரிவித்துள்ளார்.

(ச -25, 113)


## வேலையாட்கள் தேவை

இல. 194 யாழ் வீதி மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் நிறுவனத்திற்கு பொதியிடுவதற்கு பெண் வேலை ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
**076 640 3388**

## திருத்திவாசிக்கவும்

10.09.2024 பத்திரிகையில் வெளிவந்த கனகசபாபதி நமநாதன் என்பவரின் மரணஅறிவித்தலில் கனகசபாபதி நமநாதன் (முன்னாள் காணி குடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி) என்பதற்குப் பதிலாக கனகசபாபதி முன்னாள் காணிகுடியேற்ற அதிகாரி, பிரபல சட்டத்தரணி என பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

விளம்பரதாரர்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

01. **முகாமையாளர்.** 02. **காசாளர்**
03. **அலுவலக உதவியாளர்.**
04. **பேருந்து நடத்துநர்.**

**077 386 6250, 077 573 1318**

## வாடகைக்கு விடப்படும்

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியிலுள்ள கடையின் 1ம் மாடி வாடகைக்கு விடப்படும். பற்சிகிச்சை போன்ற வைத்திய நிலையத்திற்கு ஏற்றது.

**077 114 3622**

(CS/28723) J-1


# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 23 கடற்கரை வீதி, ஆதன இலக்கங்கள் 385, 385 1/1, 385 1/2, 385 1/3, 387, 389 ஆகிய வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் தாவீது மனுவேல் கைம்பெண் எலிசபெத் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குருநகர் புதுமை மாதா கோவில் மேற்கு வீதி இல. 45 ஐச் சேர்ந்த 1) ஜோர்ஜ் கென்றி இராசநாயகம் 2) ஜோர்ஜ் கென்றி பீலிக்ஸ் செல்வநாயகம் 3) ஜோர்ஜ் கென்றி யோசப் ஆகியவர்கள் 14.09.1988 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இயூஜின் மரியாம்பிள்ளை முகதாவில் 1047 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்த தமது சகோதரிகளாகிய 1) ஜோர்ஜ் கென்றி மகள் திரேசம்மா 2) ஜோர்ஜ் கென்றி மகள் பிலோமினா 3) ஜோர்ஜ் கென்றி மகள் மேரி றோஸ் ஆகியோருக்கு நன்கொடையளித்துள்ளனர்.

மேற்குறித்த உறுதியில் நன்கொடை கொடுப்பவரினதும் நன்கொடை ஏற்பவரினதும் பேர்த்தியாகிய கிறகரி யோசேப் பெண் திரேசியாப்பிள்ளை ஆட்சியும் உரிமையுமாக விருந்து அவர் மூலமாக தமக்கு வந்தடைந்த தகப்பன் வழி முதுசமும் ஆட்சியுமானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனங்களை குருநகர் புதுமை மாதா கோவில் மேற்கு வீதி இல. 45 ஐச் சேர்ந்த ஜோர்ஜ் கென்றி மகள் திரேசம்மா, ஜோர்ஜ் கென்றி மகள் மேரி றோஸ் ஆகியோர் 18.05.2003 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராமநாதன் ஜெயசிங்கம் முகதாவில் 3418 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் செபஸ்ரியன் பெனடிக்ற் ஜெராட் ஸ்ரனிஸ்லஸ் க்கும் பெண் செல்வநாயகிக்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று குருநகர் இறை: "குடியிருப்பு வளவும் மேய்ப்பன் வளவும்" நிலப்பரப்பு 1 ஒன்று குளி (6) ஆறும். இதன் எல்லைகள்

கிழக்கு : ஆசீர் யேசுராசாவின் ஆதனம்
வடக்கு : மரியான் பிறஞ்சியின் உரிமைக்காரரின் ஆதனம்
மேற்கு : றோட்டு
தெற்கு : சம்பேதுருவானவர் மடம் இதடங்கலும்

தற்போது செபஸ்ரியன் பெனடிக்ற் ஜெராட் ஸ்ரனிஸ்லஸ்வும் பெண் செல்வநாயகியும் இவ்வாதனங்களைத் தமது பெயரிற்கு ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனங்களிற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனங்களானது ஜெராட் ஸ்ரனிஸ்லஸ்வும் பெண் செல்வநாயகியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழரின் எதிர்பார்ப்பு காகிதக்குப்பைகள் அல்ல

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கை விவகாரம் அமர்வில் எடுக்கப்பட்டிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் - கடந்த காலங்களில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களைக் கொண்டுவந்த நாடுகளும், ஆதரவளித்த நாடுகளும் இலங்கையின் போக்குத் தொடர்பில் கடும் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. இறுதிப்போரின்போதும், அதற்கு முன்னரும் இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இலங்கை பொறுப்புக்கூறவேண்டும் என்று அந்த நாடுகள் வலியுறுத்தியிருக்கின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறலின்மை நீடிக்கின்றது என்றும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடந்தவற்றுக்கு இலங்கை உடனடியாகவே எதிர்வினையாற்றியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்கப்போவதில்லை என்று இலங்கை அறிவித்திருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஏற்கனவே இலங்கையின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் உள்ளடக்கங்களைக் கூட இலங்கை இன்னமும் நிறைவேற்றவில்லை - அதற்கான சிறு எத்தனிப்பைக்கூட எடுக்கவில்லை. அவ்வாறிருக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் புதிய தீர்மானங்களை - அதிருப்திகளை இலங்கை கணக்கில் எடுக்கும் என்று நம்புவது முட்டாள்தனமானது.

இலங்கை அரசு இதற்கு முன்னரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை பகிரங்கமாக நிராகரித்திருந்தது. இணை அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து வெளியேறியிருந்தது. தீர்மானத்தை நிறைவேற்றிய நாடுகள் அது தொடர்பில் எதுவும் அலட்டிக்கொள்ளவில்லை. வெறுமனே அறிக்கைகளோடு அந்த விடயம் கடந்து போகச் செய்யப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டுவரும் - நிறைவேற்ற ஆதரவளிக்கும் நாடுகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே இலங்கையுடன் ஒட்டி உறவாடிக் கொண்டே இருக்கின்றன. இலங்கையின் சண்டித்தனப் போக்கைக் கைகட்டி வேடிக்கை பார்க்கின்றன. இலங்கை இக்கட்டான நிலைமைகளில் சிக்கித் தவித்தபோது - அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டபோதும், அவற்றைக் கணக்கில் எடுக்காது இலங்கையை அந்த நாடுகள் காப்பாற்றியிருந்தன.

உள்நாட்டில் மறுக்கப்பட்ட தங்களின் உரிமைகளை சர்வதேசத்தின் உதவியுடன் மீட்டெடுத்துவிடலாம் என்று நம்பிக்கொண்டிருக்கும் நாட்டின் அப்பாவிச் சிறுபான்மை மக்களின் காதில் பூச்சுற்றும் செயற்பாடாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடக்கும் விடயங்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு - அதற்கான அழுத்தங்களை இலங்கைக்கு வழங்குவதற்கு ஏராளமான சந்தர்ப்பங்கள் கடந்து போயுள்ளன. அந்தச் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதாலும் - அறிக்கைகளை விடுவதாலும் எதுவும் மாறிவிடப் போவதில்லை. கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் காகிதக் குப்பைகளாக மாறிவிட்ட நிலையில், இனி நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் அவ்வாறே மாறும் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்கப் போவதில்லை.ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அதிருப்தி வெளியிடும் உறுப்பு நாடுகள், பேரவைக்கு வெளியே இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முயலவேண்டும். பிராந்திய நலன் - பூகோள அரசியல் சதிராட்டங்களுக்கு தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்துவதை விடுத்து, தங்கள் உரிமைக்காக - நீதிக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் மக்களுக்குத் தீர்வை வழங்க இதயசுத்தியுடன் முயல வேண்டும். தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது அதையே தவிர, வருடா வருடம் கொண்டுவரப்படும் தீர்மானங்களையோ, அறிக்கைகளையோ அல்ல என்பதைச் சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.




# போஷாக்கின்மையால் 16,000 குழந்தைகள் !

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, செப்.11**

**நாட்டில் சுமார் 16 ஆயிரம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

குழந்தைகளின் போஷாக்கின்மை நிலைமையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட, நாடாளுமன்ற விசேட குழுவின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும் குடும்பங்களில் கால் பகுதியினர் அயலவர்களின் உணவின் மூலம் வாழ்கின்றனர்.

உயரம் குறைதல், பலவீனமாதல், நிறை குறைவாக இருத்தல், நுண் போசனைக் குறைபாடுகள் (விற்றமின்கள் கனியுப்புகள் போதியளவு இல்லாமை) போன்ற நான்கு விடயங்களின் ஊடாக சிறுவர் போஷாக்குக் குறைபாட்டு நிலைமைகள் ஏற்படுவதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

# இரு வாரங்களில் சா/தரப் பெறுபேறு

கொழும்பு, செப்.11

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் இம்மாதத்துக்குள் வெளியிட எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. அந்தப் பரீட்சை பெறுபேறுகளை இம்மாதத்துக்குள் வெளியிடத் தயாராக உள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# 1,350 ரூபா இணக்கம்

கொழும்பு, செப்.11

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,350 ரூபாவை அடிப்படைச் சம்பளமாக மாத்திரம் வழங்கமுடியும் என்று சம்பள நிர்ணய சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஊக்குவிப்பு திறன் கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படமாட்டாது என்றும் மாறாக மேலதிகமாக எடுக்கப்படும் கொழுந்து கிலோ ஒன்றுக்கு 50 ரூபா வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. (ச)

# மஹபொல அதிகரிப்பு

கொழும்பு, செப்.11

பல்கலைக்கழக மாணவர்களின் மஹபொல மற்றும் உதவித்தொகையை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

2025 ஏப்ரல் முதல் அமுலுக்கு வரும் வகையில் மஹபொல புலமைப்பரிசில் 7,500 ரூபாவாகவும், உதவித்தொகை 6,500 ரூபாவாகவும் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச)

# ஆசிய வங்கியால் 200 மில்.டொலர்

கொழும்பு, செப்.11

நிதித்துறையில் ஸ்திரத்தன்மை மற்றும் சீர்திருத்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 2 துணைத் திட்டங்களின் கீழ் ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்கை அடிப்படையிலான கடனைப் பெற அமைச்சரவை அனுமதித்துள்ளது. அதன்படி இரண்டாவது துணைத் திட்டத்தின்கீழ், 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையைப் பெறும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தில் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நாளை

12.09.2024

வியாழக்கிழமை - ஆவணி - 27

[illegible] - 09.03

[illegible] 33 - 03.03

## நாளொரு நல்வார்த்தை

ஒரு புத்திசாலி வாய்ப்பை அதிர்ஷ்டமாக மாற்றுகிறான்.

- தோமஸ் புல்லர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

## திருமதி நகுலேஸ்வரி செந்திவேல்

**ஆசிரியர் - SLTS - I பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி**



**சேவை விபரம்**

- ஆசிரிய சேவை முன் பயிற்சி மகரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி — 27.12.1984 - 17.01.1985
- அ/முக்கிரியாவ முஸ்லிம் வித்தியாலயம் கஹடகஸ்திகிலிய — 18.01.1985 - 31.01.1987
- யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய் — 01.02.1987 - 31.12.1988
- அ/முக்கிரியாவ முஸ்லிம் வித்தியாலயம் கஹடகஸ்திகிலிய — 01.01.1989 - 16.05.1990
- மட்/ வெம்பு அ.த.க பாடசாலை கிரான். — 17.05.1990 - 16.06.1992
- யா/வட இநது மகளிர் கல்லூரி பருத்தித்துறை. — 17.06.1992 - 31.05.2012
- யா/வட இநது ஆரம்பப் பாடசாலை பருத்தித்துறை. — 01.06.2012 - 11.09.2024

எதிர்வரும் 12.09.2024 அன்று ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெறும் எமது ஆசிரியை அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

அவர் மேலும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

Congratulations

**வாழ்த்துவோர்:**
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை
பருத்தித்துறை.

(CR/43198) J-1

# மணிவிழா நாள் வாழ்த்து

## திருமதி தயாநிதி ஜெயானந்தா (ஆசிரியர்)

11.09.2024

**பயிற்றப்பட்ட ஆசிரியர் - கணிதம்**

**சேவைக் காலம் 37 வருடங்கள்**



- 14.12 .1987 - 10.02.1990 குளி/ கெக்குண கொல்லி முஸ்லிம் ம.வி
- 11.02.1990 - 31.12.1991 யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை
- 01.01.1992 - 31.08.1994 குளி/ கிரி/ அல்அமீன் மகா வித்தியாலயம்
- 01.09.1994 - 31.12.1994 யா/ நுணாவில் மேற்கு அ.த.க.பா
- 01.01.1995 - 12.05.1999 யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
- 13.05.1999 - 02.07.2000 யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.
- 03.07.2000 - 16.07.2000 யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.
- 17.07.2000 - 31.12.2000 யா/மயிலணி சைவமகா வித்தியாலயம்.
- 01.01.2001 - 31.12.2002 வ/நொச்சிக்குளம் கனிஸ்ட வித்தியாலயம்.
- 01.01.2003 - 02.03.2003 வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்
- 03.03.2003 - 08.02.2015 யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.
- 09.02.2015 - 10.09.2024 யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா

ஆசிரியரின் சிறப்பான சேவையைப் பாராட்டி இந்நாளில் இறையருளுடன் பல்லாண்டு காலம் நோய் நொடி இன்றி சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

***வாழ்த்துவோர்:*** ஆசிரியர் நலன்புரிக் கழகமும்
பாடசாலைச் சமூகமும்
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா

(CS/56133) J-1

# யானை அட்டகாசம் விவசாயம் பாதிப்பு!

முல்லைத்தீவு,செப். 11

முல்லைத்தீவு, செம்மலை புளிய முனைப் பகுதியில் யானைகளின் தொல்லை காரணமாக ஆயிரம் ஏக்கர் வரையான பயிர்ச் செய்கைகள் பாதிக்கப் பட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இரவு வேளைகளில் வருகை தரும் யானைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருகிறது. யானை வேலிகளை அமைத் துத் தந்து பயிர்களைப் பாதுகாக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக் கப்படவில்லை.

பெருமளவு பணத்தைச் செலவு செய்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள நாம் யானைகளின் அட்டகாசத்தால் தொடர்ந் தும் இழப்புகளை சந்தித்து வருகின் றோம்.

இதனால் எதிர்காலத்தில் நெற்பயிர்ச் செய்கை நடவடிக்கையில் இருந்து விலகும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-22,13)



தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டு எழுத்தறிவு தின கருத்தமர்வு வரணி கரம்பைக்குறிச்சி பொது நோக்கு மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-45-9)


**CALLING APPLICATIONS**
**TO BECOME PARTNER ORGANIZATIONS OF THE START AND IMPROVE YOUR BUSINESS (SIYB) PROGRAM IN SRI LANKA**

SIYB Sri Lanka

The Start and Improve Your Business (SIYB) Association of Sri Lanka is a national umbrella organization of the major business support service providers for MSMEs. SIYB Association is affiliated with the ILO's Global SIYB Program. SIYB Association of Sri Lanka has decided to enroll a new batch of Partner Organizations as part of its new strategic direction.

Interested government organizations, registered NGOs, and private sector organizations can apply. Visit the SIYB Website for more information:
**http://www.siybsrilanka.org/.**

A ZOOM information session on September 12 (Thursday), 2024 at 3.00 p.m. for more information:
**Meeting ID: 817 7005 2111 Passcode: 252619**

Submit your completed application forms to **ceo@siybsrilanka.org** on or before September 20, 2024.

(CS/56440) J-1


# அறிவித்தல்

நீர்வேலி ஸ்ரீஅரசகேசரிப் பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா 16.09.2024 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் உடைக் கப்படும் தேங்காய் கொப்பறா விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் ஒரு கிலோவுக்கான விலையைக் குறித்து கடிதம் மூலம் 14.09.2024 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ செயலாளர், ஸ்ரீஅரசகேசரிப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபை, நீர்வேலி மத்தி, நீர்வேலி என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

குறிப்பு :-

கூடியவிலை கோருபவருக்கு கொப்பறா வழங்கப்படும். அன்றைய தினமே (16.09.2024 திங்கட்கிழமை) முழுப்பணத் தையும் செலுத்தி கொப்பறாவைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

பரிபாலன சபை
ஸ்ரீஅரசகேசரிப் பிள்ளையார் கோவில்
நீர்வேலி.

(CS/56168) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு எதிரிக்கு
எதிரான சிறந்த
ஆயுதம், மற்றொரு
எதிரியே.
- பிரெடரிக் நீட்சே

# புதன் பொய்கை

11.09.2024
புதன்கிழமை

கொ.டயான்
*ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்*



## வரண்ட நாவின் நுனியில்

# புங்குடுதீவின் நாடித்துடிப்பு

இலங்கையின் வடபாலமைந்த யாழ். குடாநாட்டில் காணப்படும் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடு தீவுக் கிராமம் இன்றைக்கு அபிவிருத்தியை நோக்கிப் பயணப்பட்டாலும், சில அடிப்படைத் தேவைகளுக்காக மக்கள் இன்னமும் காத்திருக்கவேண்டிய கட்டாய நிலையே காணப்படுகின்றது.

இலங்கை நாட்டில் அபிவிருத்தி எனும் போர்வையில் பெரும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் தொன்று தொட்டே சில தீர்க்கப்படாத பிரச்சினைகள் காணப்படுகின்றன.

அதற்கு புங்குடுதீவுக் கிராமமும் விதிவிலக்கல்ல. 'நீரின்றி அமையாது உலகு' என்பார்கள். அந்த நீருக்காக புங்குடுதீவுக் கிராமமக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சுத்தமான குடிநீர் வசதிகள் எதுவுமின்றி அன்றாடம் அந்தரித்துக்கொண்டிருக்கும் நிலையில் என்றுதான் விடிவு காலம் கிடைக்கும்? என்ற வினாவுக்கு இதுவரை காலமும் பதில் இல்லை. நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் பல பரப்புரைகள் கிராமத்துக்குள் ஊடுருவுவதை தவிர மக்களின் தேவைகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. வேலணை சாட்டியிலிருந்து பவுசர்களின் ஊடாக புங்குடுதீவு மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பவுசர்களின் ஊடாக குடிநீர் விநியோகிக்கப்பட்டாலும் ஏன் அது சாதாரண விளிம்பு நிலை மக்களைச் சென்றடைவதில்லை? என்ற கேள்விக்கு விடை தேடிச் சென்றபோதுதான் ஆச்சரியமான பதில்கள் கிடைத்தன.

### சாட்சியங்கள்

இதுவரை காலமும் புங்குடுதீவு தெற்குக் கடற்கரையோரத்தை அண்டிக் காணப்பட்ட கண்ணகி அம்மன் ஆலயத்துக்குச் சென்று தாங்கள் குடிநீரைப் பெற்று வந்ததாகவும், இப்போது ஆலயம் சீரமைப்புச் செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கும் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கிறார் புங்குடுதீவில் நீண்டகாலமாக வசிக்கும் கொ.எட்வீஸ் அம்மா என்னும் குடும்பப் பெண். அதைவிட பவுசரில் குடிநீர் விநியோகிப்போர் சாதாரண மக்களை கருத்தில் கொள்ளாமல் வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே குடிநீரை விநியோகம் செய்துவிட்டுப் போவதாகவும் தமக்கு குடிநீர் கிடைப்பது என்பது கேள்விக்குறியான ஒரு விடயம் என்றும் அந்தத் தாய் கண்ணீர் மல்கக் கூறியிருந்தார்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த யோசப் கொன்சரயின் என்பவர் கூறுகையில், குடிநீர்க் குழாய் பொருத்தப்பட்டு பல வருடங்கள் ஆகியும் அந்த குழாயிலிருந்து வெறும் காற்று மட்டும்தான் வருகிறதே தவிர தண்ணீர் வரவே இல்லை என்கின்றார். பணத்தைக் கொடுத்து தண்ணீரைப் பெறுவதற்கும் கூட இன்று பல துன்பங்களையே சந்திக்க நேரிடுவதாகவும் குறிப்பிடுகிறார். இதேபோன்று ஜீவராசா என்பவர் தெரிவிக்கையில், 'நான் என்னுடைய குடும்பத்தைக் கடற்றொழில் செய்தே காப்பாற்றி வருகிறேன். எமது ஊரில் குடிநீர்த் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாகவே காணப்படுகிறது. என்னுடைய பிள்ளைகள் தற்போது படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினை எப்போது தீரும் என்று எதிர்பார்ப்போடு ஒவ்வொரு நாளையும் நான் கடக்க வேண்டி இருக்கிறது' எனக் கூறினார்.



### பிஞ்சுகளின் கையில் தண்ணீர்க் குடங்கள்

குடும்பப் பெண்கள், தந்தையர்கள் மட்டுமல்ல, துரதிஷ்டவசமான விடயம் என்னவெனில் கல்வி கற்கும் சிறுவர்கள் கூட தம் கைகளில் குடங்களை ஏந்திக்கொண்டு குடிநீருக்காய் ஊரெங்கும் அலைந்து திரிவதுதான்.

**குடும்பப் பெண்கள், தந்தையர்கள் மட்டுமல்ல, துரதிஷ்டவசமான விடயம் என்னவெனில் கல்வி கற்கும் சிறுவர்கள் கூட தம் கைகளில் குடங்களை ஏந்திக்கொண்டு குடிநீருக்காய் ஊரெங்கும் அலைந்து திரிவதுதான்.**

புங்குடுதீவைப் பொறுத்தவரையில் சுண்ணக் கற்பாறைகளால் ஆன கிணறுகளே அதிகமாகக் காணப்படுகின்றன. இதனால் இவை இருநீர் சுவை கொண்ட தண்ணீராகவே காணப்படுகிறது. புங்குடுதீவு மக்களுக்கான குடிநீர் பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் தொடர்பில் வேலணைப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், சூழலில் மேம்பாட்டு அமைவகத்தின் செயலாளருமான கருணாகரன் நாவலனிடம் வினவிய போது, இரணை மடுவிலிருந்து குடிநீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ள நிலையில் மருதங்கேணி தாளையடிப் பகுதியில் பாரியளவான நன்னீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், கடல் நீரைச் சுத்திகரித்து நன்னீராக்கி அதனை யாழ்ப்பாணம் முழுவதிலும் குழாய் ஊடாக விநியோகம் செய்யும் பணிகள் தற்பொழுது மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு உலக வங்கி பெருமளவில் நிதிப் பங்களிப்பினை மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், 2025ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் புங்குடுதீவு மக்களுக்குரிய குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வரும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் புங்குடுதீவு மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான குடிநீர்த் தேவை அவர்களுக்கு கிடைக்கும் வரையில் அவர்களின் வாழ்க்கையும் ஒரு போராட்டம் தான் என்பது மறுப்பதற்கு அல்ல.


எனவே பணத் தினைத் தேவையற்ற ஆடம்பரங்களுக்காய் அள்ளிக் கொட்டும் புங்குடுதீவு வாழ் புலம்பெயர் உறவுகள் மற்றும் உரிய அரச அதிகாரிகள் இந்தப் பிரச்சினை தொடர்பில் உடனடியாகக் கவனம் எடுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும். இதன் மூலமாக வெகுவிரைவில் சுத்தமான குடிநீர் கிடைக்கப் பெறவேண்டும் என்பதே பெருமளவு மக்களின் ஒரே கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சம்சுதீன் முகம்மட் அஜீர்,
2 ஆம் வருட சிறப்பு கற்கை
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்,

# ஐந்திலும் கல்வி அறுபதிலும் கல்வி

வியக்கத்தக்க விஞ்ஞானம் விண்ணையும், மண்ணையும், எம்மையும் சிறகடிக்கச் செய்யும் அளவிற்கு தொழில்நுட்பங்களும், தொடர்பாடல்களும் வளர்ச்சி அடைந்திருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டிலே மனிதனது தேவைகளும், தேடல்களும் நீண்டுகொண்டே இருக்கின்றன. தாயின் கருவில் கருவுற்றதிலிருந்து, மரணித்து மண்ணறையில் மடியும் வரை மனிதனானவன் காலத்தின் சூற்சுமங்களைத் தாண்டி புதியனவற்றைப் புரிந்து, தேவையானவற்றைத்தெரிந்து, அறிந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டியுள்ளது. இதனால் தான் "ஔவையார் கற்றது கையளவு கல்லாதது உலகளவு"என்றார்.



கல்வி என்பது மனிதனின் அறிவு, திறன் மற்றும் மனபாங்கை மேம்படுத்தும் சக்தியாகும். இது உலகின் எல்லா சமுதாயங்களிலும் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றதை நாம் காணலாம். வாழ்நாள் நீடித்த கல்வி என்பது பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் மட்டும் பெற்றுக் கொள்ளும் ஒன்றல்ல. அது வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் தொடர்ந்தும் இடம்பெறவேண்டிய ஒப்பற்ற பயணம். வாழ்நாள் முழுவதும் கல்வியைத் தொடர்வதன் மூலம் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பரிணாமத்திலும் உன்னதம் காண முடியும். முதன் முதலில் கல்வி என்பது குடும்பத்தில் இருந்து பெரியோர்கள் சிறார்களுக்கு தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் தொடங்குகிறது. பிள்ளையின் அடுத்த பாடம் பாடசாலையில் ஆரம்பிக்கிறது. பாடசாலை என்பது அறிவின் விதைகள் விதைக்கப்படும் பூமி. பாடசாலையில் நண்பர்கள், ஆசிரியர்கள், பாடங்கள் அனைத்தும் ஒளிரும் விண்மீன்கள் போல நம் மனதில் பதிந்து விடுகின்றன. பாடசாலை படிப்பை முடித்ததும் கல்லூரி, பல்கலைக்கழகங்களிலே வித்தியாசமான அனுபவத்தோடு சேர்த்து நம் அறிவையும் வளர்த்துக்கொள்கிறோம்.

காலத்தின் கற்றல் அனுபவம் அத்தனையும் மகத்தானது. ஒவ்வொரு தருணமும், ஒவ்வொரு நாளும், நமக்குத் தெரிந்திருக்காத புதிய பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது. இக் கற்றல் அனுபவம் நம்மை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. சமூகம் நம் வாழ்வின் மற்றொரு கல்வி நிலையம். மக்களுடன் கலந்து, அவர்களின் அனுபவங்களை பகிர்ந்து, அவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது அவசியமான ஒன்று. குடும்பம், சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளும் அன்பு, ஒற்றுமை, நல்லொழுக்கம் ஆகியவை நம்மை நல்வழிக்குக் கொண்டு செல்கின்றன. இன்றைய நவீன உலகில் தொழிநுட்பம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. இவ் வளர்ச்சி வாழ்க்கையில் நுழைந்து பல்வேறு வகையான மாற்றங்களை ஏற்படுத்துகிறது. செயற்கை நுண்ணறிவு, கணினி தொழில்நுட்பம், உலகமயமாக்கம் போன்றன எம்மைத் தொடர்ந்தும் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளுகின்றன.




வாழ்நாள் முழுவதும் கற்றலின் முக்கியத்துவத்தை நாம் பார்கின்ற போது தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரம் முதல் சமூக கட்டமைப்புகள், உலகளாவிய தொடர்புகள் வரை வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் விரைவான மாற்றங்களால் வகைப்படுத்தப் படுகிறது. பாரம்பரியக் கல்வி முறைகள், பெரும்பாலும் முறையான, நேரகட்டுமான மற்றும் நிறுவனக் கற்றலையே வலியுறுத்துகின்றன. இவ் ஆற்றல்மிக்க சூழலில் செழிக்கத் தேவையான அறிவு மற்றும் திறன் என்பன தனிநபர்களைச் சிந்தைப்படுத்துவதற்குப் போதுமானதாக இல்லை. தொழில்நுட்பம் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து புதியவற்றுக்கான தேவையை உருவாக்கும் போது சில திறன்கள் வழக்கற்றுப் போகின்றன. இன்று நிலவுகின்ற வேலைக்கான போட்டி சந்தையில் தொடர்ச்சியான கற்றலுக்காக அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் ஊழியர்களை முதலாளிகள் அதிகளவில் மதிக்கின்றனர். வாழ்நாள் முழுவதும் கற்பவர்கள் தம்மைத் தக்கவைத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும், செயலூக்கமுள்ளவர்களாகவும், புதிய சவால்களைச் சமாளிக்கும் திறன் கொண்டவர்களாகவும் கருதப்படுகின்றனர். இவை, சிறந்த வேலை வாய்ப்புகள், பதவி உயர்வுகள், தொழில் மாற்றங்களுக்கு வழிவகுக்கும். மேலும், தகவல் தொடர்பு, சிக்கலைத் தீர்ப்பது, விமர்சன சிந்தனை போன்ற மென் திறன்களின் வளர்ச்சி, தொழில் வெற்றிக்கு ஒருங்கிணைந்ததாகும். இதனை வாழ்நாள் முழுவதும் கற்றல் மூலம் கணிசமாக மேம்படுத்தலாம். "கல்வி மனிதர்கள் தங்களின் சமூகத்தில் நல்லவர்களாக உயர்ந்து வளர்வதற்கு உதவ வேண்டும்" என்ற காந்தியின் கருத்துக்கிணங்க வாழ்நாள் நீடித்த கல்வி என்பது மனிதனின் ஆளுமை வளர்ச்சி, சமூக மேம்பாடு, தொழில்மேம்பாட்டிற்கு முக்கியமானது. வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் சிறந்த நிலையை அடைய, தொடர்ந்து கற்றுக்கொள்வது அவசியமானது. சமூக ஒற்றுமை, சுறுசுறுப்பான குடியுரிமையை மேம்படுத்துவதில் வாழ்நாள் நீடித்த கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது. தகவலறிந்த மற்றும் படித்த மக்களை வளர்ப்பதன் மூலம் தனிநபர்களை ஜனநாயக செயல்முறைகளிலும்; சமூக நடவடிக்கைகளிலும் மிகவும் திறம்பட பங்கேற்க உதவுகிறது. இவ் அணுகுமுறை சமூகப் பிளவுகளைக் குறைத்து சமத்துவமான சமூகத்தின் வளர்ச்சியை ஆதரிக்கிறது. குடும்ப பொறுப்புகள் மற்றும் வேலைச் சுமைகள் அதிகரித்த நிலையில் கல்வியைத் தொடர்வதில் மக்கள் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். இருப்பினும், இணையவழிக் கல்வி, முதியோர் கல்வி, தொலைக் கல்வி போன்ற முன்னோக்குச் செயன்முறைகள் எம்மை இடைவிடாமல் கற்றுக் கொள்வதற்கான வழிகளை உருவாக்குகின்றன.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதி உதவிகள், குறைந்த வட்டி கடன்கள் மூலம் பொருளாதார தடைகளைத் தாண்டி வாழ்நாள் நீடித்த கல்வியைப் பெற உதவுகின்றன. இத்துடன், தொழிநுட்ப வளர்ச்சி, குடும்பம் மற்றும் சமூகத்தின் உற்சாகம், ஊக்குவிப்பு ஆகியவை மக்கள் தமது அறிவு, திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்;ப்பை விரிவாக்குகின்றன. இவ்வாறாக, வாழ்நாள் நீடித்த கல்வி இலங்கையில் ஒரு புதிய மாற்றத்தின் விதையை நட்டி, ஒவ்வொரு நபரின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது. நடமாடும் வாழ்க்கையில், வாழ்நாள் முழுவதும் கல்வியை தொடர்வதில் சில சவால்கள் இருக்கும். அவற்றில் சில முக்கியமான சவால்களையும்; அவற்றுக்கான தீர்வுகளையும் நோக்க வேண்டியுள்ளது. இன்று உலகில் நமக்கு இலவசமாக கிடைக்கும் விலைமதிப்பில்லா சொத்து நேரம் தான். ஆனால், மனித சமூகத்திற்கு அதன் அருமை தெரிவது கிடையாது. குடும்ப பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் வேலைச் சுமை போன்றவை நம் நேரத்தை முழுவதும் பிடித்துக் கொள்ளுகிறது என்கிறோம். ஒவ்வொரு மணி நேரத்தையும் திட்டமிட்டு பயன்படுத்தும் போது குறிப்பிட்ட நாட்களில் அல்லது நேரங்களில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட முடியும். இன்று நாம் எதிர்கொள்கின்ற மிகப் பெரிய ஒரு பிரச்சினை வாழ்வியலை நடத்துவதற்குத் தேவையான பணம் நம்மில் பலரிடம் இருப்பது கிடையாது என்பது யாவரும் அறிந்த விடயமே. பல கல்வி முகாம்கள், கல்விக் கூடங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மேலதிக கல்வியை தொடர்வதற்கான கட்டணங்கள் அதிகமாக இருந்தாலும் இலவச புத்தகங்கள், நூலகங்கள் போன்றவற்றை இதற்கான தீர்வாக பயன்படுத்தலாம். பல கற்கைநெறிகள் ஊக்கத்தொகை அல்லது உதவித் தொகைகளையும் வழங்குகின்றன. அது போல ஒருவரிடம் உடல், மன அழுத்தம், ஆர்வமின்மை போன்ற பல காரணங்கள் இருக்கக்கூடும். ஆனால், மாறி வரும் இந்த உலகத்தில் அந்த மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் நாம் நமது வாழ்வை சிறப்பாக அமைத்துக் கொள்ள வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். "நாம் கற்றுக் கொள்வது மட்டும் நம் கல்வியின் முடிவல்ல. கற்றதை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்துவதுதான் முக்கியம்". என்பது வாழ்நாள் முழுவதும் கல்வியின் அடிப்படையான கோட்பாடுகளில் ஒன்று ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைவாரக் கண்காட்சி தொடர்ந்தும் வீறுநடை!



**அம்மான்**

வடமாகாணத்தில் பனை வளர்ப்பதில் மிகவும் ஆர்வமாகவிருந்து காடு, மேடு எல்லாம் பனை விதைகளை விதைப்பதில் தனது கவனத்தைச் செலுத்தி பனையை வளர்த்த அமரர் கந்தையா கனகராசாவின் வியர்வைக்கு பெறுமதி சேர்க்கும் விதமாக பனை அபிவிருத்தி கண்காட்சி நடத்தப்படுகின்றது.




'பனை எங்கள் சூழல், பனை எங்கள் பொருளாதாரம், பனை எங்கள் பண்பாடு' எனும் தொனிப்பொருளில் வடமாகாணசபையால் 2015ஆம் ஆண்டின் பனை அபிவிருத்திக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஜூலை 22ஆம் திகதி தொடக்கம் ஜூலை 28ஆம் திகதிவரையும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திசபை, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சு இணைந்து நடத்தும் பனையின் பண்பாட்டை வெளிக்கொணரும் நிகழ்வாகும். வடமாகாணத்தின் பனை சார் உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்துவதன் ஊடாக சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதாகும். இதன் மூலம் பனை சார் உற்பத்தியினை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள பல குடும்பங்கள் நன்மை பெறுகின்றன. இந்த நிகழ்வானது வெறுமனே பனங்கட்டி, புழுக்கொடியல் விற்கும் நிகழ்வல்ல. வடக்கிலுள்ள பனை வளத்திலிருந்து கிடைக்கும் உற்பத்திகளுக்கான பெறுமதிசேர் நடவடிக்கை ஆகும். தூரநோக்கு சிந்தனையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வை காத்திரமானதாக்குவதும் தக்கவைத்துக் கொள்வதும் இதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்குமான கூட்டுப்பொறுப்பாகும்.



பனைவாரக் கண்காட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் வடமாகாணத்தில் பல ஏற்றுமதியாளர்கள் உருவாகியுள்ளனர். அனைத்து வகையான பனை சார் உற்பத்திப் பொருள்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலை உருவாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் விற்பனை அளவுகள் அதிகரித்துள்ளன. இந்த ஆண்டு நடைபெற்ற கண்காட்சியில் 2.6 மில்லியன் விற்பனை நடைபெற்றுள்ளது. குறித்த நிகழ்வுக்காக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், கூட்டுறவு அமைப்புகள், மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியன நிதிப்பங்களிப்புச் செய்கின்றன.

இந்த பனைவாரக் கண்காட்சியூடாக, ஒவ்வொரு ஆண்டும் காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டு அதில் பனைசார் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தி விற்பனையும் இடம்பெறுகிறது. பனை சார் ஆய்வு மாநாடுகள் நடைபெறுவதினூடாக மக்களின் வாழ்வாதாரம் மேம்படுகிறது. பனை சார் ஆக்கங்கள், ஆய்வு மாநாடுகளின் முன்னேற்றங்கள், கூட்டுறவு அமைப்புக்களின் வரலாறுகள், சிறந்த அங்கத்தவர்களது புகைப்படங்கள், பரிசு பெற்ற ஓவியப்போட்டி படங்கள் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய ஒரு வரலாற்று ஆவணமாக தாலம் சஞ்சிகை வெளியாகிறது. கலை நிகழ்வுகள் நடத்தப்படுவதன் மூலம் தமிழர் பண்பாடும் கலாசாரமும் பாதுகாக்கப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் சிறப்பாகச் செயற்படும் அங்கத்தவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறுகிறது. மாகாண மட்டத்தில் சிறந்த காட்சிக் கூடங்களை தெரிவுசெய்து முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கான பணப்பரிசில்களும் வழங்கப்படுகிறது.

பனை சம்பந்தமான மாவட்ட மட்ட, மாகாண மட்ட ஓவியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் பொருள்களாகவும் பணமாகவும் வழங்கப்படும். பரிசுகள் கண்காட்சியில் வைத்து வழங்கப்படுவதுடன் அவர்களது ஓவியங்களும் காட்சிப்படுத்தப்படும். ஒவ்வொரு வருடமும் கூட்டுறவுக் கிராமிய வங்கியில் மாகாண மட்டத்தில் 90 மாணவர்களுக்கான கணக்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதன்மூலம் சிறுவர் சேமமாக 90 பாடசாலை மாணவர்கள் கூட்டுறவில் இணைக்கப்படுகின்றனர். இதன் மூலம் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கண்காட்சிக்கான ஒழுங்குபடுத்தல் பங்குனி மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். அப்பொழுது கூட்டுறவு அமைப்புகள் தங்களுக்குத் தேவையான பனை சார் உற்பத்திப் பொருள்களை தங்களது அமைப்பு மற்றும் மகளிரிடமிருந்து ஒழுங்குபடுத்தி பெற்று ஜூலையில் இடம்பெறும் பனை அபிவிருத்திக் கண்காட்சிக்கு முன்னாயத்தங்களை மேற்கொள்கின்றன.



# பொங்கி எழும் சூரியனே...!

பொறுத்தது போதுமென
வறுத்தெடுக்கும் சூரியனே!
கடுப்படைந்த காரணத்தை
வெளிப்படையாய் கூறாயோ?

உணவாக்கும் விவசாயி
நடைப்பிணமாய் உருக்குலைய
உழைக்காத பெருச்சாளி
கொழுத்திடக் கொதித்தாயோ?

தாவரத் துணி விலக்கி
தரைமகளின் துகில் உரியும்
துச்சாதனச் செயல் போக்க
துணிந்து நீ வெகுண்டாயோ?

மாட்டுப் பொங்கல் வைத்து
மாதா வெனப் போற்றி
ஈனர் கொல் களங்கள்
முளைத்திட சினந்தாயோ?

வீதிகளில் கழிவு போடும்
வீணர்கள் செயல் கண்டு
வீதியில் இறங்கா வண்ணம்
விதி முடிக்க வந்தாயோ?

ஆதிக் குடிகளினை
ஆதிக்க குடிகள் ஒடுக்கி
நீதிக்கு மாறாய் ஆள
நீ தீப்பந்தாய் எழுந்தாயோ?


அன்னையர் கண்ணீர்க்கும்
அறம் கிடைக்கா மண்ணில்
ஒன்று படாத் தலைவர்களை
தின்றிடத் துணிந்தாயோ?

ஆதித் தாயாகக்
காத்து வந்த கதிரவனே!
காரணத்தை சொல்லி அடி!
கையெடுத்துக் கெஞ்சுகிறோம்!!

இரா.ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2



# நவீன யுகத்தை வெல்லும் விதியில் பிரபஞ்சத்துடனான எமது தொடர்பு

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)
எழுத்தாளர்,
ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,
சண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குநர்.

நாம் ஒவ்வொருவரும் பிரபஞ்சம் பற்றி எமது கண்ணோட்டங்களில் பல்வேறு கருத்துகளை கொண்டுள்ளோம். சிலர் அதனை 'கடவுள்' எனும் பெயரினாலும், சிலர் 'இயற்கைச் சக்தி' எனவும், சிலர் 'பேரண்டம்' எனவும் அழைப்பதுண்டு. எவ்வாறாக இருப்பினும் பிரபஞ்சசக்தி பற்றிய உண்மையை எம்மால் முழுமையாக அறிந்துவிட முடியாது என்பதே நிதர்சனம். 'றொபின் சர்மா' என்ற பிரபல எழுத்தாளர், 'பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த செயற்பாட்டைக் கவனத்தில் கொள்ளும்போது நம் வாழ்க்கை என்பது வரையறையில்லா கால ஓட்டத்தில் கணத்தில் தோன்றி மறையும் மின்மினிப்பூச்சி போன்றதே. ஆதலினால் இப்பயணத்தை விவேகத்துடன் அனுபவியுங்கள்' என்று குறிப்பிடுகிறார்.

நாம் இப்பொழுது எந்த நிலையில் இருந்தாலும் சரி, எதைப் பற்றியும் எண்ணி மனமுடைந்து கவலைப்படாமல் பிரபஞ்சத்துடன் சரணாகதி அடைந்தால் எந்தவிதமான சூழ்நிலையையும் எமக்குச் சாதகமாக மாற்றியமைக்கமுடியும். நாம் உடல் ஆரோக்கியத்தில் பாதிக்கப்பட்டு இருக்கின்றோமா?, பொருளாதார நெருக்கடி, உறவுகளில் சிக்கல், கற்றலில் குழப்பங்கள், நாம் நினைத்ததை அடைவதில் தாமதம் போன்ற அனைத்துக்கும் தீர்வு பிரபஞ்ச சக்தியுடன் இணைந்து செயல்படுவதுதான் என்பதை இவ்விதி கூறுகிறது. பிரபஞ்ச சக்தியானது ஏழை, பணக்காரன், படித்தவன், படிக்காதவன் என்ற ஏற்றத் தாழ்வுகள் பார்த்துச் செயற்படுவதில்லை. அது தன்னோடு சேர்ந்து பயணிப்பவர்களுக்கு தனது அனைத்து விந்தைகளையும் காட்ட தயாராகத்தான் இருக்கிறது.

எங்களுடைய மனம் எவ்வாறு சிந்திக்கின்றதோ அதற்கு ஏற்றால் போல் பிரபஞ்சமும் விடையளிக்கின்றது. நாம் சிந்திப்பது நேரான, எதிர்மறையான சிந்தனையாக இருந்தால் அதற்கு ஏற்ப அதுசெயற்படும். ஏன் நாம் பிரபஞ்ச சக்தியை எதிர்மறையான சிந்தனைக்கு பயன்படுத்தவேண்டும் என்பதை எங்களிடம் நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். இதற்கு மதங்களின் புனித நூல்களில் குறிப்பிட்டுள்ள சில கருத்துகள் என் சிந்தனையை பெரிதும் தூண்டின. அவை 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் அப்போது கண்டடைவீர்கள்' என்பதும் 'எது நடக்கவிருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்' என்பனவுமாகும். எமக்கு எவ்வளவு காலத்துக்குள் எவை வேண்டும் என்பதைத்தெளிவான மனநிலையுடன் பிரபஞ்சத்திடம் முன்வைத்தாலே போதுமானது. அத்துடன் பிரபஞ்சமும் தன்னுடைய வேலையை உடனே ஆரம்பித்து அவற்றை எங்களிடம் கொண்டுவந்து சேர்த்து விடும்.

'இரகசியம்' என்ற நூல் பிரபஞ்சம் பற்றிய பல்வேறு சக்தி வாய்ந்த விடயங்களை ஆழமாகக் கூறுகின்றது. இதில் குறிப்பிட்ட படைப்பாக்க செயற்பாடுகள் கேட்டல், நம்புதல், பெறுதல் ஆகியன முக்கியமானதும், நாம் நினைத்தவற்றை அடைவதற்கு எங்களை வழிகாட்டுவதாகவும் அமைகின்றது. எது தேவை என்பதை தெளிவாகக் கேட்கவேண்டும், அது நிச்சயமாகக் கிடைக்கும் என மனதார நம்பவேண்டும், பின்பு அவை பெற்றுவிட்டதைப் போன்று உணருதல் ஆகிய மூன்றுமே மிகவும் அவசியமானது. சுவாமி விவேகானந்தரின் 'நீ எதை நினைக்கின்றாயோ, அது வாகவே ஆகின்றாய்! என்ற கூற்றிற்கேற்ப பிரபஞ்ச சக்தியை உயிர்த்தோழனாக்கி வெற்றியை அடைவோமாக!





## சஞ்சிகை வெளியீடும் கவியரங்கமும்

முத்தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய கல்வியினூடாக வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் யோகம் சஞ்சிகை வெளியீடும், கவியரங்கமும் யாழ். கைதடி அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி உ.வளர்மதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



தென்மராட்சி பிரதேச செயலகத்தின் பன்னிரு மாத விளக்கு வேலைத்திட்டத்தின் கீழ் பட்டக் கண்காட்சி மறவன்புலவு சிறுவர் சமூகத்துடன் இணைந்து அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ரி 9)






## 'எமது காலம்' அருங்காட்சியகம்

மன்னாரில் 'எமது காலம்' எனும் தொனிப்பொருளில் வரலாற்று அருங்காட்சியகம் 'சேச் வோ கொமன் கிறவ்ன்ட்' நிறுவன உதவியுடன் மன்னார் மாவட்ட சர்வோதயத்தின் அனுசரணையுடன் மன்னார் நகர சபை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை தொடக்கம் இன்று புதன்கிழமை வரை காலை 8 மணி தொடக்கம் பி.ப 5 மணி வரை நடைபெற்று வருகின்றது.

எமது மக்களின் கடந்த கால வரலாற்றை நோக்கும் முகமாகவும், இலங்கையின் 70 வருட வரலாற்றை அனுபவிக்கும் தருணமாகவும் இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர் நிலங்களை விளை நிலமாக்குக!

கிளிநொச்சி மாவட்டத்தில் உவர் நிலப்பரப்புகளில் வளரக் கூடிய மரக் கன்றுகளை நடுகை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பூநகரியின் பல பகுதிகளிலும் ஆனையிறவு, கண்டாவளையின் பல கிராமங்கள் உவரடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்கின்ற மணல் அகழ்வால் பெருமளவு மரங்கள் அழிக்கப்படுகின்றன. கடலுக்கு அண்மித்த பகுதிகளில் தொடர்கின்ற மணல் அகழ்வால் கடல் நீர் உட்புகக் கூடிய அபாயம் உள்ளது.

எனவே உவர்த் தடுப்பணைகளை அமைத்து மரக்கன்று நடுகையை முன்னெடுப்பதன் மூலம் சிறந்த சூழலை உருவாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி-13)

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**வீடுகள் / கட்ட டங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்கும் பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள் கட்டடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள் / கட்டடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு அண்மையில் மற்றும் யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி / காங்கேசன்துறை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை / உணவறை / படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்கள். வீட்டு உபகரணங்கள். மின்சார உபகரணங்கள் மற்றும் சமயலறை உபகரணங்களுடன் இருத்தல் வேண்டும்.
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர் / மின்சார விநியோகம்
06. அனைத்து விதமான பராமரிப்பு நடவடிக்கைகள்ளையும் உரிமையாளரே மேற்கொள்ள வேண்டும்.
07. வீட்டின் வெளிப்புறத்தை சுத்தம் செய்வது உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் குப்பைகளை அகற்றுவதற்காக பொருத்தமான அணுகுமுறையொன்றினை ஏற்படுத்தி பராமரிக்கப்பட வேண்டும்.

வீடுகள் / கட்டடங்கள் முதலாவதாக ஒரு வருட காலத்துக்காக வாடகை அடிப்படையில் எழுத்துமூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் எழுத்து மூலமான ஒப்பந்தமொன்றின் மூலம் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள் / கட்டடங்கள் தொடர்பான முழு விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1) | பெயர் (வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளர்) | 9) | படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) | வீட்டு /கட்டடத்தின் முகவரி | 10) | குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) | உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) | வரவேற்பறை (உண்டு / இல்லை) |
| 4) | பிரதேச செயலகப் பிரிவு | 12) | சாப்பாட்டு அறை (உண்டு / இல்லை) |
| 5) | கிராமசேவகர் பிரிவு | 13) | சமையலறை (உண்டு / இல்லை) |
| 6) | யாழ்ப்பாணம் விமான நிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) | வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) | மாடிகளின் எண்ணிக்கை | 15) | உள்ள வீட்டுத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் முழு விபரம் |
| 8) | வீட்டின் உள்ளே பரப்பளவு (சதுரடி) | 16) | வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின் / கட்டடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை. (வீட்டின்/கட்டடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)
06. எதிர்பார்க்கப்படும் முற்பணத் தொகை. (வீட்டின் / கட்டடத்தின் உரிமையாளருடன் கலந்துரையாடி தீர்மானிக்கும் உரிமை கம்பனியிடம் உள்ளது.)

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வாடகை அடிப்படையில் வீடுகள் / கட்டடங்களை பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு "தவிசாளர், திணைக்கள பெறுகை குழு இலக்கம் 02, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி கட்டுநாயக்கவிற்கு 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 011-2263550 / 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.

தவிசாளர்,
வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்)கம்பனி,
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,
கட்டுநாயக்க

# ரணில், அநுர இருவரும் கூட்டுக் களவாணிகள்!

*சஜித் மீண்டும் குற்றச்சாட்டு*



**கொழும்பு, செப். 11**

**பெயரளவில் வெவ்வேறாக இருந்தாலும் பிரதிவாதிகள் இருவரும் திருட்டுத்தனமாக ஒன்றாக உள்ளனர்.**

கட்சிகள் இரண்டாக இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவும் அநுரகுமார திஸாநாயக்கவும் ஒன்றாக இணைந்து இரகசிய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றனர். இவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து என்னுடைய வெற்றியை தடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாவத்தகம நகரில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஜித் பிரேமதாஸ ஆகிய எனக்கு பொறுப்புகள் கிடைக்கப்பெற்றால் மக்களுடைய துன்பமும் வேதனையும் இல்லாது செய்யப்படும் என்பதால், மக்களின் துன்பத்தை சந்தைப்படுத்துகின்ற ரணிலும் அநுரவும் அதற்கு விருப்பமில்லை.

தற்பொழுது ரணில் - அநுர கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஜனாதிபதியே அவரது வாயால் சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி தோல்வி அடைவார் என்பதால் அநுரகுமாரவுக்கு வாக்களிக்குமாறு கூறியிருக்கிறார்.

அத்தோடு அநுரகுமார வடக்குக்குச் சென்று தெற்கில் உள்ளவர்கள் அவருக்கு வாக்களிப்பதால் வடக்கிலும் கட்டாயம் வாக்களிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது வெறும் பகல் கனவாகும். முழு நாடும் முழு நாட்டையும் கவனிக்கின்ற, சாதாரண மக்களை கவனிக்கின்ற, பொதுமக்களுக்கு சேவை செய்கின்ற, கீழ்மட்ட மனிதர்களை பாதுகாக்கின்ற அரசாங்கம் ஒன்றிற்காக எல்லோரும் ஒன்றாக இணைந்திருக்கின்றார்கள். அதற்காக ஐக்கிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படும் - என்றார். (அ-ஒ,இ)

### கடந்த இரண்டு ஆண்டுகளில்

# அடிப்படைச் சுதந்திரத்தை பறிப்பதற்காகச் சட்டங்கள்

## ஐ.நா.ம.உ. பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கைக்கு காட்டம்



கொழும்பு, செப். 11

மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களைப் பறிக்கும் நோக்கில், இலங்கையில் சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன - என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் ஆரம்பமான நிலையில், இலங்கை தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றும்போதே, இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமான முறையில் மீறப்படுவதாக வோல்கர் ட்ரக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மிக மோசமான வகையில் மீறப்படுவதற்கு ஏதுவாகச் சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. எழுந்தமானமான கைதுகள், சித்திரவதைகள் போன்ற கடந்தகால வன்முறைகள் எதிர்காலத்திலும் நிகழக்கூடும் என்ற அச்சத்தையே இது தோற்றுவித்துள்ளது.

இலங்கையை வழிக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பும் ஆதரவும் தேவை. உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இன்னும் உண்மைக்காகவும், நீதிக்காகவும், இழப்பீட்டுக்காகவும் காத்திருக்கின்றனர். சம்பந்தப்பட்ட நபர்கள் தண்டிக்கப்படாமை ஊழலையும் வன்முறையையும் ஊக்குவிக்கிறது.

இலங்கையில் தேர்தல் காலங்கள் நெருங்குகின்றன. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகம் பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள், நடைபெறவுள்ள தேர்தலின் போதும், அதற்குப் பின்னரும், கருத்துச் சுதந்திரம், மற்றும் அமைதியான முறையில் ஒன்று கூடும் உரிமைகளை முழுமையாகப் பாதுகாக்கவேண்டும் - என்றார். (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1964



மறைவு 10 . 09 . 2024

## கிறிஸ்துதாசன் பிரீதினி

பழையவாய்க்கால் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்துதாசன் பிரீதினி 10.09.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்வராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற கிருபைவரம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கிறிஸ்துதாசனின் அன்பு மனைவியும் அருள்ராஜ், தனுராஜ், கிறிஸ்திகா (ஆசிரியர் கச்சாய் ம.வி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மடோனா, ஜெறோம் ஆகியோரின் மாமியும் டிவானியா, அருணிகாவின் பேத்தியும் கிருபாகரன், செல்வாகரன் காலஞ்சென்ற சிறிதரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 12.09.2024 வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித நீக்கியார் தேவாலயத்தில் நடைபெற்று மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

A 9 வீதி பழையவாய்க்கால்
மிருசுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 910 3660

(CS 1327) V-1

# மரண அறிவித்தல்



## சின்னராசா நல்லம்மா

பங்களா வீதி மீசாலையை பிறப்பிடமாகவும் வெள்ளம் போக்கட்டி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா நல்லம்மா 10-09- 2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும், கந்தையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற பொன்னம்மா, முத்துப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், நாகரத்தினம்மா, நவபாலன், தர்மபாலன், நாகேஸ்வரி அம்மா, நாகபூசணி அம்மா (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயரும், காலஞ்சென்ற கனகசிங்கம் (AO), சிவலோகநாயகி ( ஓய்வு பெற்ற ஆசிரியர்), மேரி மல்லிகா, காலஞ்சென்ற சீவநாயகம் (LCL), நிமலமோகன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயா- அமுதா (சுவீஸ்) ஜெயசீலன்- அஜந்தா (லண்டன்), காலஞ்சென்ற ஜெயருபன், அனுசியா (BOC முகாமையாளர்), உமையவன் (ஆசிரியர்) கோபி, சுபானுஜா, நிரோஷன், ஆதித்யா நிருசன் நிவேதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கீர்த்தனன், குமரன், அபிநாஷ், அஜய், அஸ்வின் அக்ஷயன், சப்தவி, ஆறுயி ஆகியோரின் பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2024) புதன்கிழமை மதியம் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியாப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த தகவலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்.
074 3477 498

# கடவுச்சீட்டுப்பெறுவதற்கு நாள்கணக்கில் காத்திருப்பு

## வவுனியாவில் அந்தரிக்கும் மக்கள்

**வவுனியா, செப்.11**


**வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு முன் கடவுச்சீட்டுப் பெற்றுக்கொள்வதற்காக வவுனியா குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு முன் நீண்டநாள்கள் காத்திருக்க வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**



கழிவு வாய்க்காலின் மிக மோசமான துர்நாற்றம், நுளம்புத் தொல்லை, பாம்புகளின் நடமாட்டம் என பெரும் அச்சத்துக்கு மத்தியில் எமது காத்திருப்புத் தொடர்கிறது.

குழந்தைகளுடன் வாரக்கணக்கில் இரவு பகலாக படுக்கை விரிப்புகளை விரித்து படுத்து உறங்கவேண்டியுள்ளது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு விரைவில் தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.ச-25, 214)



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வு யாழ். மாவட்ட பதில் மாவட்டச் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருத லிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ரி-9)

# மரண அறிவித்தல்

## அமரர் ஆறுமுகம் தில்லைநடேசன்



தோற்றம் 19.12.1945 மறைவு 10.09.2024

அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தில்லைநடேசன் அவர்கள் நேற்று 10.09.2024 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்புச் சகோதரனும், சாந்தநாயகி அவர்களின் அன்புக் கணவரும் தர்சிகா (ஆசிரியர் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) கரிஷன், நிரோஷன் (RDA, WS-Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதனன் (Boc Paranthan), தர்சா, தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஸ்மிதன், கிருத்திக், கஸ்மிகா, சஜினி, லித்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை (11.09.2024) காலை 06.30 மணியளவில் அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று 9.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள்

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 556 6166

(CS 1326) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9/11 தாக்குதலின் நினைவு இன்று!

வொஷிங்டன், செப். 11
அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தின் மீது அல் குவைதா அமைப்பால் நடத்தப்பட்ட இரட்டைக் கோபுரத் தாக்குதலின் 23ஆவது நினைவுதினம் இன்றாகும்.

பயணிகள் விமானங்களைக் கடத்திய அல் குவைதா பயங்கரவாத அமைப்பினர், அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தின் மீதும், அமெரிக்க இராணுவத் தலைமையகத்தின் மீதும் இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தனர். இதில், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பரிதாபகரமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஜனாதிபதித்...

கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தலைமையில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் தமிழரசுக் கட்சியின் விசேட குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அறிக்கை காரணமாக வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்குவதாகக் கொள்கை அடிப்படையில் இணக்கம் ஏற்பட்டு அதில் எங்களுக்கும், அவருக்கும் இணக்கம் ஏற்படக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தி எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் அல்லது 15 ஆம் திகதி கூடி ஆராய்ந்து பொது மக்களுக்காக அறிக்கையை வெளியிடவுள்ளோம்" - என்றார்.

இதன்போது, நீங்கள் ஒரு கட்சியின் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து கருத்து வெளியிட்டு இருந்தீர்கள். ஆனால் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு என அறிவித்துள்ளது. இது பொது மக்களைக் குழப்பதா என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது,

நாங்கள் மாறுபட்ட கருத்துகளைக் கூற வில்லை. நான் ஆரம்பத்திலும் கூறிய கருத்து கட்சிக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் எடுத்த தீர்மானம் என்ன என்ற விளக்கம் எனக்கு தேவைப்பட்டிருந்தது. அப்போது கட்சி முன்வைத்த கருத்தை ஆராய்ந்து அதனை மக்கள் மத்தியில் முன்வைப்போம் எனத்தான் கூறினேன். பத்திரிகை ஒன்று ஏதோ தேடிப் பிடித்து தலைப்புச் செய்தியாக ஒன்றை பிரசுரித்ததைப் பார்த்து நான் மாறுபட்டு சொன்னேன் எனக் கூற முடியாது. இப்பொழுதும் கட்சி எடுத்த முடிவு தொடர்பில் பேசினோம். இறுதி முடிவு தான் முக்கியமானது. இன்றும் அதில் என்ன மாற்றங்கள், திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் கதைத்துள்ளோம். அதற்குப் பொருத்தமாக அறிக்கைளை பொது மக்களுக்கு வழங்குவோம். கட்சியின் பலம், மக்களின் பலம் என்பவற்றை ஆராய்ந்து ஜனநாயக ரீதியாக அதனை சரியாகப் பயன்படுத்தவேண்டும். அதற்கு ஏற்ப பொருத்தமான ஓர் அறிக்கையை தேவைப்பட்ட திருத்தங்களுடன் இறுதியாக வெளியிடுவோம். அது தான் எமது இறுதி அறிக்கையாக இருக்கமுடியும். அது பற்றியே பேசி வருகின்றோம் எனத் தெரிவித்தார். (அ-ஒ-110)

## எமது...

துள்ளார். தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் மாநாடு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஒரேயொரு விடயத்தைத்தான் ...வேண்டியுள்ளது. அது எமது எதிரி எமக்கெதிராக என்னதான் செய்தாலும் எமது வெற்றியை நிறுத்திவிட முடியாது. அண்மையில் ரணில் விக்கிரமசிங்க 'எனது நண்பர் அநுர, எனது கூட்டாளி' எனக்கூறிக் கொண்டாலும், எமது ஆட்சியின் கீழ் மத்திய வங்கி மோசடிக்கு எதிராக அவசியமான சட்ட நடவடிக்கைகளை எடுத்தே தீருவோம். கடந்த காலத்தில் அவர் மதுபானசாலைக்கான அனுமதிகள் வழங்கியமை தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'கூட்டாளி', 'கூட்டாளி' எனக்கூறிக் கொண்டு எவ்வளவு தான் எங்கள் பின்னால் வந்தாலும் எல்.ஆர்.சி. இன் காணிகளைப் பகிர்ந்தளித்த விதம் பற்றி நாங்கள் கட்டாயமாக விசாரணைகளை மேற்கொள்வோம். அதைப்போலவே அவர் எமது நாட்டின் மோசடிப்பேர்வழிகளை பாதுகாக்க மேற்கொள்கின்ற முயற்சிகள் பற்றியும் நாங்கள் கட்டாயமாக விசாரணைகளை மேற்கொள்வோம்.

எமது நாட்டின் அரசியலுக்கு வருவதற்குள்ள கதவுகளைப் பழைய ஆட்சியாளர்கள் மூடியிருந்தார்கள். ஆதனங்களை ஒரு பரம்பரையிலிருந்து மற்றொரு பரம்பரைக்குக் கையளிப்பதைப்போல் எமது நாட்டின் அரசியலும் ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரையை நோக்கியே பாய்ந்து சென்றது. அந்தப் பரம்பரையினரின் அரசியல் பற்றி இளைஞர் தலைமுறையினர் வெறுப்பையும் அருவருப்பையுமே கொண்டிருக்கிறார்கள். புதிய பரம்பரைக்கு அரசியலை ஒரு கௌரவமான இடமாகவும் பெறுமதியுள்ள இடமாகவும் எடுத்துக்காட்ட அவசியமான மாற்றத்தை தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாங்கள் செய்துகாட்டுவோம்" - என்றார். (அ-ஒ-சி)

## அனைத்து...

நாடு முழுவதிலும் உள்ள தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பேசப்பட்டது. தேர்தல் நெருங்குவதால், மாவட்டச் செயலர் பதவிக்கான பணிகளை விட தெரிவத்தாட்சி அலுவலர் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுமாறு தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

அத்துடன் அரசியல் தரப்புகளால் ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் உடனடியாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக் கொண்டு வருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இம்முறை தேர்தலில் விருப்பு வாக்கு எண்ணப்படவேண்டிய சூழல் ஏற்படலாம் என்பதால் முதல்சுற்று வாக்கு எண்ணிக்கை சகல வாக்கெண்ணும் நிலையங்களிலும் ஒரே நேரத்தில் நடந்து முடியவேண்டும். ஏனெனில் முதல் சுற்று நிறைவடைந்தால் மாத்திரமே இரண்டாம் சுற்றுக்குரிய முதலிரண்டு வேட்பாளர்கள் யார் என்பது தெரிய வரும். ஏதாவது ஒரு வாக்கெண்ணும் நிலையத்தின் முடிவு தாமதமானாலும் ஏனைய வாக்கெண்ணும் நிலையங்களும் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே சகல வாக்கெண்ணும் நிலையங்களிலும் ஒரே நேரத்தில் வாக்கு எண்ணிக்கை நடப்பதை தெரிவத்தாட்சி அலுவலர்கள், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் உறுதிப்படுத்தவேண்டும். அத்துடன் ஏதாவது வாக்கு எண்ணும் நிலையத்தில் தாமதம் ஏற்படுவதாக உணர்ந்தால் உடனடியாக மேலதிகப் பணியாளர்களை நியமித்து வாக்கு எண்ணிக்கை விரைவுபடுத்த வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (அ-ஒ-5)

## கணவனும்...

தர்மலிங்கம் மகேஸ்வரி என்பவர் கடந்த ஓகஸ்ட் மாதம் பத்தாம் திகதி இயற்கை எய்தியிருந்தார். அவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் இடம்பெற்றன. இதையடுத்து அன்று மாலை 4.30 மணியளவில் திடீர் உடல் நலக் குறைவு காரணமாக அவரின் கணவரான முத்தன் தர்மலிங்கம் உயிரிழந்துள்ளார். (அ-ம-100)

## சஜித்...

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ நிச்சயம் வெற்றிபெறுவார். அவர் முதல் சுற்றிலேயே 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுவிடுவார். வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு ஆதரவு இல்லை. ரணிலாலும் முன்னோக்கிச் செல்லமுடியாது. அனைத்து இன மக்களின் ஆதரவும் சஜித்துக்குதான் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றால் 23 அல்லது 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும். இடைக்கால அரசொன்று அமைக்கப்படும். ஆளுநர் பதவிகளில் மாற்றம் செய்யப்படும்" - என்றார். (அ-ம-44)

## இராஜாங்க...

சக்களுடன் உள்ள மேலும் நான்கு இராஜாங்க அமைச்சர்களான ஷசீந்திர ராஜபக்ச, டிசி சானக, தேனுக விதானகே மற்றும் பிரசன்ன ரணவீர ஆகியோரின் பதவிகளே இவ்வாறு பறிக்கப்பட்டுள்ளன. அரசமைப்பில் தனக்குள்ள அதிகாரத்தின் பிரகாரமே குறித்த இராஜாங்க அமைச்சர்களை, ஜனாதிபதி பதவி நீக்கம் செய்துள்ளார். (அ-ம-44)

## சிலிண்டருக்கு...

களின் எதிர்காலத்தை நினைத்து இந்த நாட்டு மக்கள் செப்ரெம்பர் 21 ஆம் திகதி எரிவாயு சிலிண்டருக்காக வாக்களிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

"அண்மைய பொருளாதார வீழ்ச்சியை தொடர்ந்து மக்கள் படும் துன்பத்தைப் போக்க சஜித்தோ அல்லது அநுரவோ முன்வரவில்லை. உலகெங்கிலும் உள்ள அரச தலைவர்களை சந்தித்து உரம், எரிபொருள் கேட்டபோது சஜித்தும் அநுரவும் தேர்தலை நடத்துமாறு கோரினர். மக்களின் வலிக்கு மத்தியில் தேர்தல் நடத்துமாறு கோரியும் வேலைநிறுத்தம் நடத்தியும் நாட்டைச் சீர்குலைக்க முயன்ற தலைவர்களை நம்ப முடியாது.

எனவே சிரமப்பட்டு கட்டியெழுப்பப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்தி அபிவிருத்தியடைந்த நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை நிறைவேற்ற அனைவரும் கைகோர்க்க வேண்டும்" - என்றார். (அ-ஒ-இ)

## ரயில்...

பயணித்த ரயில், புளியங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். நேற்று இரவு வரை இறந்த பெண் அடையாளம் காணப்படவில்லை. (அ-ம-110-18)

## டிப்பர்...

நேற்று மாலை இடம்பெற்ற இந்தத் துயரச் சம்பவத்தில் வினுதா விஜயகுமார் (வயது-17) என்ற மாணவியே உயிரிழந்தவராவார்.

படுகாயங்களுக்கு உள்ளான அவர், உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## மீன்பிடியில்...

யாழ்ப்பாணம் - உதயபுரம் பகுதியிலிருந்து மீன்பிடிக்காகச் சென்று மன்னார் கடற்பரப்புக்கு அருகாக மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, தனக்கு நெஞ்சு வலிப்பதாகத் தெரிவித்துவிட்டு படகினுள் சுகவீனமுற்று இருந்துள்ளார். இதையடுத்து கரைக்குத் திரும்பி அவரை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-20)

## வடமாகாணத்துக்கு...

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடுவதற்காகவே அவர் இவ்வாறு வரவுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குரிய பிரசார நடவடிக்கைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்கு வருகின்றது. சஜித்தின் கடைசி பரப்புரைக் கூட்டம் 18 ஆம் திகதி கொழும்பை மையப்படுத்தியதாக அமையவுள்ளது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் இரத்து

சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கான காலவரையறைகள் தொடர்பில் அவருடன் நான் கலந்துரையாடி விசேட குழுவுக்கு அறிவிப்பேன். எனவே மத்திய குழுக் கூட்டமும் இரத்து செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் விசேட குழுக் கூட்டம் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

14ஆம் திகதி நடைபெற இருந்த மத்திய செயற்குழுக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே கட்சியின் மத்திய செயற்குழு முடிவெடுத்ததன் காரணமாக மீண்டும் மத்திய செயற்குழுவை கூட்ட வேண்டிய தேவை இல்லை என்பதனால் அது இரத்து செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் பட்சத்தில் பின்னர் கூடலாம். தற்போது அதற்கான தேவை இல்லை என்பதன் அடிப்படையிலேயே இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு எனத் தெரிவித்ததன் அடிப்படையில் அவரது தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை விடயம், புதிய அரசமைப்பை உருவாக்குவது தொடர்பான விடயம் உட்பட பல்வேறு விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால வரையறை தொடர்பாக சஜித்துடன் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவது என முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த கால வரையறைகள் தொடர்பாக சஜித் பிரேமதாஸவுடன் நான் கலந்துரையாடியதன் பின்னர் அதில் எட்டப்பட்ட தீர்மானங்களை இந்த விசேட குழுவுக்கு அறிவிப்பது எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது - என்றார். (ஓ-110)

'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 27 . 10 . 1968

மறைவு 09 . 09 . 2024

**செல்வி சரஸ்வதி அம்பலவாணர்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**மங்களேஸ்வரன் மயூரன் குடும்பத்தினர்**
**(கோபுரம் சவுண்ட்)**
**கொக்குவில்.**



# யாகி தாண்டவத்தில் 64 பேர் உயிரிழப்பு!

லண்டன், செப்.11

வியட்நாமின் வடக்குப் பகுதியைத் தாக்கிய "யாகி" புயலால் 64 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காவ் பாங் மாகாணத்தில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது என்றும், அங்குள்ள ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டிருந்த பாலம் இரு துண்டுகளாக உடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பாலத்தில் பயணித்த பஸ் ஒன்று ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

புயல் தாக்கிய இடங்களில் தற்போது மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று வியட்நாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கடந்தவாரம் "யாகி" புயல் சீனாவைத் தாக்கியதில் 4 பேர் உயிரிழந்திருந்தனர். (ஏ-இ)

# இந்தியாவில் குரங்கம்மை

கொழும்பு, செப்.11

இந்தியாவில் ஒருவர் குரங்கம்மைத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார். ஆபிரிக்க நாடுகளில் பரவிவரும் குரங்கம்மை நோயால் இதுவரை 500க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அதனால் உலக சுகாதார நிறுவனம் அவசரநிலைமையை அறிவித்துள்ளது.

இந்தநிலையில் வெளிநாட்டில் இருந்து வந்த இந்தியர் ஒருவருக்குக் குரங்கம்மைத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து இந்திய சுகாதாரத்துறை கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

குரங்கம்மை தொற்று ஏற்பட்டால் காய்ச்சல், தலைவலி, வீக்கம், முதுகு வலி, தசை வலி, சோர்வு ஆகிய அறிகுறிகள் தென்படும். காய்ச்சல் ஏற்பட்டதும் சிறிய தடிப்புகள் உடலின் பிற பகுதிகளுக்கும் பரவும். பொதுவாக உள்ளங்கை மற்றும் பாதங்களில் இந்த தடிப்புகள் வரும்.

ஏற்கனவே பாதிப்புக்குள்ளான ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதன் மூலம் குரங்கம்மை நோய் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

# ஆடுகள் திருட்டு!

புத்தூர் மேற்கு, நவக்கிரிப் பகுதியில் பண்ணை ஒன்றில் இருந்து ஐந்து ஆட்டுக்குட்டிகள் களவாடப்பட்டுள்ளதாக பண்ணை உரிமையாளரினால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சுவிஸ்நாட்டில் வசித்து வரும் நபர் ஒருவர் கால்நடைப் பண்ணை நடத்தி வருகின்றார். இந்த நிலையில் நான்கு மாதங்கள் நிறைவடைந்த நல்ல இன ஆட்டுக்குட்டிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,23)

**காணி, வீடு விற்பனைக்கு உண்டு**

கோப்பாய் தெற்கு கிராம சபை
ஒழுங்கையில் கிராம
சேவையாளர் பிரிவு J/260
நில. பர. 3 குளி 8.50
அளவுள்ள **காணியும் வீடும்**
**விற்பனைக்கு உண்டு.**
தரகர் தேவையில்லை.
077 967 2152, 077 902 4248

(CS/1316) J-1

**வேலையாட்கள் தேவை**

தாவடி கொக்குவிலில் இயங்கி வரும்
பிரபல்யமான அரிசி ஆலை
ஒன்றிற்கு Building வேலைக்கு
**வேலையாட்கள் தேவை.**
அனுபவமுள்ளவர்களுக்கு
**நாளொன்றிற்கு 4000/-**
**சம்பளம் வழங்கப்படும்.**
தொடர்புகளுக்கு:- 077 903 7356

(CS/5616) J-1

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 10 . 1968



இறப்பு 09 . 09 . 2024

**செல்வி சரஸ்வதி அம்பலவாணர்**

**(பழைய மாணவி -A/L 1987 யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி)**

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரஸ்வதி அம்பலவாணர் அவர்கள் நேற்று முன்தினம் (09.09.2024) திங்கட்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்) காமாட்சியம்மா தம்பதியரின் இளைய மகளும், இரகுநாதன் (மிருதங்க வித்துவான் - கொழும்பு), சந்தானலட்சுமி (கொழும்பு), காலஞ்சென்ற ஜெயராமன் (சுருதி வேந்தன் - வயலின் வித்துவான்), இராமச்சந்திரன் (பவா) மற்றும் ஸ்ரீநிவாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயக்குமார் (கொழும்பு), இராஜலக்சுமி (கொழும்பு), கமலேஸ்வரி மற்றும் விமலரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.02, சேர் பொன் இராமநாதன் வீதி,**
**நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 900 9366**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.